


# ஆண்டு விழா மலர்

2013 - 2014

# தமிழ் இசைக் கருவிகள்

## நரம்பு வாத்தியங்கள்



கின்னரி யாழ்
கி.மு. 2 ஆம் நூற்றாண்டு



கோல் யாழ்
கி.மு. 2 ஆம் நூற்றாண்டு



பன்னிரு நரம்பு யாழ்
கி.பி. 2 ஆம் நூற்றாண்டு



கோவையாழ்
கி.பி. 9 ஆம் நூற்றாண்டு

## காற்று வாத்தியங்கள்



புல்லாங்குழல் வகைகள்
கி.மு. 2 ஆம் நூற்றாண்டு



எக்காளம் (தாரை)
கி.மு. 2 ஆம் நூற்றாண்டு

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறும் திலகமுமே
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெரும் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமை திறம்வியந்து
செயல்மறந்து வாழ்த்துதுமே!!!
வாழ்த்துதுமே!!!
வாழ்த்துதுமே!!!

மனோன்மணியம் பெ. சுந்தரம் பிள்ளை

## *முன்னுரை*



பேரன்புடையீர்,

அனைவருக்கும் என் அன்பான வணக்கம்!

தமிழர்களாகிய நாம் அமெரிக்காவில் புலம்பெயர்ந்து, பல சோதனைகளையும் சிக்கல்களையும் எதிர்கொள்கிறோம். அதில் முக்கியமானது, குழந்தைகளுக்கு தாய்மொழியைக் கற்றுவிப்பது.

குழந்தை அதனுடைய பெற்றோர்களோடு உரையாடி மகிழும் மொழி அதன் தாய்மொழியே. அதே குழந்தை, தன் பள்ளியிலும் சுற்றத்தாரோடும் பேசிப்பழகுவது அயல்மொழியே. அதனால், பெற்றோர்களாகிய நாம், நம் குழந்தைகளுக்கு தாய்மொழியாம் தமிழ்மொழியைக் கற்றுத்தரும் பெரும்பொறுப்புக்கு பெரும்முயற்சி எடுக்கவேண்டும்.

இயல்பாக தமிழ் பேசப்படும் இடங்களில் வளரும் குழந்தைகள் தமிழ் பேசக்கற்றுக்கொள்வது மிகவும் எளிது. அவ்வாறே, பன்மொழி பயிலும் புலம்பெயர்ந்தவர்களின் குழந்தைகள், தொடக்கப்பள்ளியில் சேர்ந்ததும், வெகு விரைவில், அயல்மொழியில் உரையாடக்கற்றுக்கொள்கிறார்கள்.

பன்மொழிக்கொள்கை ஒருவரின் மொழியியல், கல்விசார் திறனை மேம்படுத்துகின்றது என்பதை பல ஆராய்ச்சிகள் கூறுகின்றன. தாய்மொழியாம் தமிழ்மொழியைப் பயில்வதால், வேறு எந்த அயல்மொழியையும் எளிதில் கற்கவியலும். நம் பண்டையப்பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் அறிந்துகொள்ளவும், பல்வேறு கருத்துப்பரிமாற்றங்களை விவாதங்களை திறம்பட மேற்கொள்ளவும் உதவியாக இருக்கும்.

வெகு விரைவில் அயல்மொழியில் உரையாடக்கற்றுக்கொள்ளும் குழந்தைகள், அதே வேகத்தில், தாய்மொழியில் உரையாடும் திறனை இழந்துவிடவும் வாய்ப்பு அதிகம். அவர்களிடம் தமிழில் பேசும்போது, அந்த உரையாடலைப் புரிந்து கொண்டாலும், சக மாணவர்களுடனும், உடன்பிறந்தவர்களுடனும், பெற்றோருக்குப் பதிலளிப்பதும் வேற்றுமொழியிலேயே. அதுவே உண்மை !

தாய்மொழியை நம் வீடுகளில் மட்டுமல்லாமல், நம் நண்பர்கள், தமிழ்ச் சமுதாயத்தில் பரவலாக பயன்படுத்தப்படுத்தும்போது, தாய்மொழியில் உரையாடும் திறனின் இழப்பு குறைகிறது. ஆகவே, வீட்டில் நம் குழந்தைகளோடும், மற்ற பெரியோர்களோடும் தமிழிலேயே உரையாடுவோம். பேச்சுத்தமிழில் உரையாடுவது குழப்பத்தைக் கொடுக்குமேயாயின், எழுத்துத்தமிழிலேயே உரையாடுவோம். குழந்தைகளும் நம்முடன் தமிழில் உரையாடுவதை ஊக்குவிப்போம்.

நம் பழந்தமிழிலக்கியங்கள், திருக்குறள் போன்ற நீதிநூல் கருத்துக்களை நாமும் படித்து, குழந்தைகளுக்கும் எடுத்துச் சொல்லவேண்டும். இணையத்தின் உதவியோடு, பல பயனுள்ள ஒலி ஒளிக்காணல்கள், சிறு கதைகள் படித்து அதைத்தொடர்ந்து உரையாடல்கள் கொண்டு, தங்களால் இயன்றபோதெல்லாம், தாயகத்துக்குக் கூட்டிச்சென்று, அங்கு வாழும் நம் மக்களின் வாழ்க்கை முறையை நேரில் கண்டறிய வாய்ப்புகள் பல ஏற்படுத்தித் தரவேண்டும்.

கற்றது கையளவு; கல்லாதது உலகளவு. நம் தமிழ்ச்சமூகம், இங்கு தழைத்து நம் அடையாளத்தைத் தொலைக்காமல் நிலைத்து நிற்க, வாழ்நாள் முழுதும் தமிழ் கற்றல் அவசியம்.

தமிழ் கற்றலின் இன்றியமையாமையை உணர்ந்து பல தன்னார்வலர்களின் முயற்சியால் வேரெடுத்த கேரி தமிழ்ப்பள்ளி, பலரின் அயராத முயற்சியினாலும், ஆதரவாலும் பல பெற்றோர்களின் ஆர்வத்தாலும், இப்போது ஆலமரமாக வளர்ந்துள்ளது. இந்த மகத்தான வளர்ச்சிக்கு இத்தனை ஆண்டுகளாகவும் உறுதுணையாக இருந்து, தங்களால் இயன்ற பங்களித்த அனைத்து தமிழ் நெஞ்சங்களுக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். இந்த வளர்ச்சியின் காரணமாக, 2014-15 கல்வியாண்டு முதல் நம் தமிழ்ப்பள்ளி 'சேலம் நடுநிலைப்பள்ளியில்' தொடர்ந்து இயங்கும்.

வடகரோலைனாவில் நடுநிலை மற்றும் உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்குப் பட்டம்பெறத் தேவையான அயல்மொழி பாடத்திற்கு, ஜெர்மன், ஸ்பானிஷ், ஃபிரெஞ்சு, சீனம், இலத்தீன் போன்ற மொழிகளையே தேர்வு செய்யமுடியும். கேரி தமிழ்ப்பள்ளியில் தமிழ் பயிலும் மாணவர்கள், வேக் மாவட்டத்தின் அங்கீகாரத்தோடு தமிழ் பயின்று, அயல்மொழித் தேவையை நிறைவு செய்யும் நோக்கோடு, ஒரு தன்னார்வளர்க்குழு பெரும் முயற்சி எடுத்து வருகிறது.

2013-14 ஆண்டில் நூறு மணி நேரத்துக்கும் மேலாக சேவை செய்து விருது பெற்ற அனைத்து ஆசிரியர்களுக்கும் பாராட்டுக்கள். இதே கல்வியாண்டில் இரண்டாயிரம் மணி நேரத்துக்கும் மேலாக தன்னார்வத்தொண்டு செய்து, கேரி தமிழ்ப்பள்ளி தங்க விருதைப் பெற்றுள்ளது என்பதைப் பகிர்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

நம் வீடுகளில் தமிழ் வாழ்ந்தால், நம் இளைய தலைமுறையின் உள்ளங்களிலும் தமிழ் வாழும். தமிழ் மொழி வாழ்ந்தால் தமிழினம் வாழும் !

வாழ்க தமிழ் ! வளர்க தமிழ்ப்பள்ளி !

இராஜி சண்முகம்



## நாளைய தலைமுறையின் நலம் காப்போம்

அறிவியல் முன்னேற்றம் அகண்ட வரையெல்லைலயை உலகிற்கு வழங்கிய அதே வேளையில் சில விஷ வித்துக்களையும் விதைத்தே சென்றுள்ளது எனலாம். இணையம் [Internet], இணைய விளையாட்டு [Internet Games], சமூக வலைத்தளங்கள் [Social Websites] மற்றும் திறன்பேசி [Smartphones]- இவைகள் இன்றைய அறிவியல் வளர்ச்சியின் அவதாரங்கள். இவற்றின் பயன்பாடுகள் நமக்கு பல வழிகளில் உதவினாலும், மாணவ சமுதாயத்தின் மேல் சில கேடுகளையும் கட்டவிழ்த்து விடவும் செய்கிறது. இந்த கேடுகளில் முதன்மையானது 'பலவீனபடுத்தல்' [Cyber-Bullying].

### பலவீனபடுத்தல் ஒரு தடை

இந்த இணைய வழி பலவீனபடுத்தல் என்பது ஒருவர் மற்றொருவரை இணையம் வழியாகவோ அல்லது கைபேசி வழியாகவோ தொந்தரவு செய்வது, மிரட்டுவது, கோபமூட்டுவது மற்றும் மனக்கவலை எற்பட செய்வதை குறிக்கும். இது ஒருவரின் மனநிலையை பாதித்து உணர்ச்சிவசப்பட செய்யும். இதன் கொடூர கரங்கள் யாரும் அறியாவண்ணம் வீட்டினுள் நீளக்கூடிய சக்திகொண்டது. இதில் வருத்தம் என்னவென்றால் இந்த கொடுமையை இழைப்பவர்களை அடையாளம் காண்பதும் அரிது எனும் உண்மை.

### ஒரு புள்ளிவிவரம் கூறுகிறது

- 43% மாணவர்கள் இணைய வழி பலவீனபடுத்தலுக்கு ஆளாகியுள்ளனர். 4 ல் 1 மாணவர் ஒருமுறைக்கு மேல் பாதிப்படைந்துள்ளனர்.
- 80% மேலான மாணவர்கள் கைபேசி உபயோகத்தினால் இந்த வகை துன்பத்திற்கு ஆளாகியுள்ளனர்.
- 81% மாணவர்கள் இணைய வழி பலவீனபடுத்தல் ஒரு எளிய ஆயுதம் என்ற கருத்தை முன்வைக்கின்றனர்.
- 90% மாணவர்கள் சமூக வலைத்தளங்கள் மூலம் வரும் பலவீனபடுத்தலை கண்டுகொள்வதில்லை எனவும் 84% மாணவர்கள் நிறுத்த சொல்லி அறிவுறுத்தியதாகவும் தெரிவித்துள்ளனர்.
- 10 ல் 1 மாணவர் மட்டுமே இதனை பெற்றோரிடமோ அல்லது ஒரு நம்பிக்கைக்குரிய பெரியவரிடமோ தெரியபடுத்துவதாக கூறியுள்ளனர்.

- பலவீனபடுத்தலால் பாதிக்கபடுபவர்கள் தற்கொலைக்கு முயல்வது மற்ற காரணங்களை விட அதிகமாக இருப்பதாக கூறப்படுகிறது.

**இந்த பலவீனபடுத்தலால் குழந்தைகள் இழப்பவை**

தன்னம்பிக்ககை, தைரியம், விடாமுயற்சி மற்றும் சமயோசிதம்

**குழந்தைகளுக்கு பெற்றோர்கள் சொல்லித்தர வேண்டிய விஷயங்கள்**

1. முக்கியமான விஷயங்களை கேட்டறிய வேண்டும்
2. நட்பு வட்டத்தைப் பற்றி தெரிந்து கொள்ளுங்கள்
3. கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துச்சொல்லுங்கள்
4. நல்லவர்களை எப்படி அடையாளம் காண்பது என்று விளக்குங்கள்
5. வாழ்க்கையில் என்னவாக விரும்புகிறார்? என்பதை கேளுங்கள். உரிய அறிவுரையுடன் நீங்கள் அவருக்கு உதவுவது எப்படி என்று திட்டமிடுங்கள்
6. அவர் உங்களுக்கு எவ்வளவு முக்கியமான நபர் என்பதை அடிக்கடி உணர்த்துங்கள். இது அவர்களுக்கு தன்னம்பிக்கையையும் மன உறுதியையும் கொடுக்கும்
7. நம் குடும்ப வரலாறை அவர் அறியட்டும்
8. நல்ல புத்தகம், கவிதை, நாவல்கள் ஆகியவற்றை அறிமுகப்படுத்துங்கள். புத்தகங்கள் படிக்கும் பழக்கத்தை இளம் வயதிலேயே பழக்கப்படுத்துங்கள்
9. உடலளவிலும் மனதளவிலும் பலசாலியாக உருவாக்குங்கள். எந்த மாதிரி பிரச்சினைகள் வெளியுலகில் வரும் அதை எப்படி சமாளிப்பது என்று சொல்லிக்கொடுங்கள்.
10. உங்கள் வரலாற்றையும் கொஞ்சம் சொல்லுங்கள். நிங்கள் எப்படி, எங்கு படித்தீர்கள், உங்கள் இளமைக்காலம், உங்கள் பொழுது போக்குகள், நீங்கள் எப்படி இந்த நிலைக்கு வந்தீர்கள், உங்கள் குடும்பம் அடைய வேண்டிய இலக்கு ஆகியவற்றை அவருக்கு தெளிவாக சொல்லுங்கள்.

வாழ்க வளமுடன்.

அன்புடன்

ஷாபி கான்



ஆசிரியரிடமிருந்து....

கேரி தமிழ்ப் பள்ளி ஆண்டு மலரின் அன்புமிகு வாசகர்களுக்கு வணக்கம்!

ஆண்டு மலரின் வழியாக உங்களை மீண்டும் சந்திப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். ஆண்டு மலரானது மாணவர்களது ஓர் ஆண்டு நினைவு மற்றும் திறமைகளை தாங்கி வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் நமது பள்ளி மாணவர்களின் திறமை வளர்ந்து கொண்ட்டிருப்பதை அவர்கள் எழுதும் கட்டுரைகளை படிக்கும் பொழுது நாம் தெரிந்து கொள்ளலாம். உதாரணமாக உங்கள் குழந்தையின் ஆரம்பக்கால கட்டுரைகளை இவ்வாண்டு மலரோடு ஒப்பிட்டு அவர்கள் தமிழ் எழுதுவதிலும், சிந்திப்பதிலும் உள்ள ஆற்றலை அறிந்துகொள்ளலாம். அதுமட்டுமல்லாது அவர்கள் கட்டுரைகளில் இருந்து நமக்கு தெரியாத சில செய்திகளை தெரிந்து கொள்ளலாம். இந்த பள்ளி மலரின் முக்கிய நோக்கம், நமது மாணவர்களின் தமிழ் மொழி மற்றும் கற்பனை திறனையும் வெளி கொணர்ந்து ஆவண படுத்துவது ஆகும்.

ஒவ்வொரு ஆண்டும் மலரின் முன் மற்றும் பின் அட்டையில் நமக்கு தெரியாத அல்லது மறந்த செய்திகளை படமாக வெளிகொணர்கிறோம். அவ்வாறாக இந்த ஆண்டு சில பண்டைய தமிழ் இசைக் கருவிகளை உங்கள் பார்வைக்காக வைக்கிறோம்.

நன்றி, வணக்கம்!

- பாரத் இராமமூர்த்தி
மலர் ஆசிரியர்



கேரி தமிழ்ப்பள்ளி

ஆண்டு 2013 - 2014

தலைமை ஆசிரியை ராஜி சண்முகம் மற்றும் ஆசிரியர்களும், மாணவர்களும்



கேரி தமிழ்ப்பள்ளி

ஆண்டு 2013 - 2014

தலைமை ஆசிரியை ராஜி சண்முகம் மற்றும் மற்றும் ஆசிரியர்கள்




ஆசிரியர் திரு தண்டபாணி சுப்ரமணியன்

ஆர்யா மயில், அம்ருதா ஐசக், ஆனந்தி செல்வராஜு, ஆதுஷன் சுதர்ஷன், ஓவியா அறிவுடைநம்பி, அஷிதி நாராயணன், நந்திகா இளங்கோ




ஆசிரியை திருமதி. மீனா இளஞ்செயன்

தக்ஷா நாகலிங்கம், ஹர்ஷினி தண்டபாணி, பழனியப்பன் அருணாச்சலம்,

ரேவந்த் கார்த்திகேயன், நிதின் ஜெகதீசன், ரோஹன் சுரேஷ், கௌதம் முத்து




ஆசிரியை திருமதி. ரெமி சுதர்சன்

ஸ்ரீநாத் ஜெயராமன், ஸ்ரீவர்தன் சண்முகராஜ், புவனேஷ் செந்தில்,

விரதேஷ் வெங்கடகிருஷ்ணன், அரவிந்த் சுனில்குமார், தான்யா விஜயகுமார்




ஆசிரியை திருமதி அமுதவல்லி தசரதன்

ரிதன்யா நாகராஜா, ஷ்ரீயா புகழேந்தி, சாரஸ்ரீ கடாம்பி, க்ரிடி நந்தகுமார்,

மாதவ் கார்த்திகேயன்




ஆசிரியை திருமதி அருணா தர்மர்

அருண் இளஞ்செயன், பாவனா ஸ்ரீனிவாசன், சந்தோஷினி ராதாகிருஷ்ணன்,

ஸ்ரீராம் குமார், அனித் சஜீவன், பிருத்து பொன்னுசாமி




ஆசிரியர் திரு காசி அழகானாந்தம்

நேஹா ஸ்ரீனிவாசா,  விஷால் சுப்பிரமணியன். ரா., கேசவ் லக்ஷ்மிநாராயணன், சஞ்ஜித் ஸ்ரீராம்




ஆசிரியை திருமதி லலிதா சண்முகவேல்

ஸ்ரவன் சுப்ரமணியன், ஸ்மிருதி சஞ்சய், அனன்யா ஜெயக்குமார்,

அன்ஜும் சபியுல்லாகான், மஹதி சுந்தரராஜன்




ஆசிரியை திருமதி சபிதா தீத்தாரப்பன்

ரூபக் ராஜசேகர், மஹேஷ்வர் முருகேசன், நேத்ரா அசோக்குமார், அக்ஷிதா அருண், ரங்கநாத் கோபால்ராஜ்



ஆசிரியர் திரு சீனிவாசன் ரெங்கசாமி

ராஷ்மி ராமானுஜம், எரின் வால்ட்டர், சேஷாந்த் விஜயகுமார்,

அபிஷன் சுதர்சனம்




ஆசிரியை திருமதி செல்வி செந்தில்

நிர்மல் சந்திரன், ஹேமந்த் சுதாகரன், ஆதிரை எழில்வேந்தன், அதிதி தினேஷ், ரித்தின் வேல்மணி




ஆசிரியர் திரு வேலப்பன் வேலப்பன்

ஓவியா இளங்கோவன், அருண் முரளி, வினிதா ஹரிணி ரவிவர்மா,

அனன்யா ராமன்




ஆசிரியர் திரு கார்த்திகேயன் நாகலிங்கம்

ஆர்னி பேன்கரஸ், நிவிதா கன்டியர், வருண் கோவிந்தராசன்,

அச்யுதா அனந்தகிருஷ்ணன், புனீத் பரமேஸ்வரன்




ஆசிரியை திருமதி சௌம்யா கணபதி

சாரங்கா ராஜகோபாலன், சிவா இராஜேஷ், ஆர்த்தி ஸ்ரீனிவாசன், ஹர்ஷா சுதாகர்




ஆசிரியை திருமதி விசயலெட்சுமி ராஜேஷ்

சஞ்சித் சிவகுமார், அவினாஷ் ஜெயகுமார், தன்யா பாலசுப்ரமணியன்,

பூர்வஜா சந்திரமௌலி, சஹானா கதிரவன்




ஆசிரியை திருமதி அல்லி தாஸ்

பத்மநாபன் சரவணன், கேஷவ் வரதராஜன், ரத்திஸ்ரீ சீனிவாசன், அந்தரா விவேக், சாஸ்னா ஜெயராமன், அனிதா முரளி




ஆசிரியர் திரு பாரத் இராமமூர்த்தி

உமெஷ் ராதாகிருஷ்ணன், சாதனா ஸ்ரீனிவாசன், மதுமதி இளங்கோ,

நித்தின் ஹரிதாஸ், ஷ்யாம் ரவிசந்திரன்




ஆசிரியை திருமதி பத்மப்பிரியா கந்தசாமி

அஷ்வத் அருண், ஸ்ரீமன் பத்ரி, திரிஷா பாரத், ஸ்ருதி சுப்ரமணியன், சாதனா மயில், கார்த்திக் அண்ணாதுரை




ஆசிரியை திருமதி சுஜாதா மோகன்

பூஜா பரமேஸ்வரன், யஷ்மிதா லெனின், லக்ஷ்மி கோபால்ராஜ், அஷ்வின் செந்தில், நொவிதா லெனின்




ஆசிரியை திருமதி சித்ரா பாஸ்கரன்

நேத்தன் நாயகம், அதிதி ஆனந்த், ஷிவாலி ராஜேந்திரன், அபிஷேக் சஜீவன்,

அதிதி நாராயணன்




ஆசிரியர் திரு சித்தீக் சின்னதம்பி

ஹானா சவேரியார், கைலாஷ் முத்து, கௌதம் தர்மர், ஆகாஷ் சண்முகவேல், அபிநயா சந்திரசேகரன், ஆர்த்தி சுரேஷ்




ஆசிரியை திருமதி சுகந்தினி சந்திரசேகரன்

அமரன் கன்டியர், ஷாலினி சுப்ரமணியன், ஆனன்யா பத்ரி, சரண்யா ஸ்ரீனிவாசன், ஸ்ரீநிதி ஸ்ரீனிவாசன், ஆனந்த் அழகானந்தம்




ஆசிரியர் திரு குரு குருபரன்

ரத்தி கணேசன், சிந்து சண்முகம், திவ்யா தியாகராஜன், அட்சயன் சந்திரசேகரன், சுஜெய் சுதர்சன், லொரன் சவேரியார்




ஆசிரியர் திரு மணிவண்ணன் முத்துமாணிக்கம்

தரணி செந்தில்குமார், ஜோ டேனிகா இனிகோ, அஜய் சுனில்குமார்,

கிருத்திகா வேலப்பன்




ஆசிரியர் திரு ஷபி கான்

ஹேமாக்ஷி அறிவுடைநம்பி, காவ்யா குமார், ஓம் செந்தட்டி




ஆசிரியர் திரு ஆற்காடு இராஜசேகர்

ஹர்சினி வேல்மணி, மீரா இராஜேஷ், திவ்யா லக்ஷ்மிநாராயணன், ஆசிகா அருண், ராஜீ கணேசன்




ஆசிரியை திருமதி ரம்யா வரதராஜன்

அஸ்வின் லிங்கராஜ், அஸ்வினி தண்டபானி, அர்ச்சனா அண்ணாதுரை,

ஐஸ்வர்யா பாலாஜி, அனுஶ்ரீ ஜெயகுமார்




ஆசிரியர் திரு பாரதி பாண்டி

யாழினி எழில்வேந்தன், சுருதி இராஜகோபாலன், சரண் சந்திரசேகரன், சரண் சிவகுமார்




ஆசிரியர் திரு எழில்வேந்தன் தர்மராஜன்

ஜூலியன் நாயகம், கார்த்திக் இளங்கோ, அகிலன் பாண்டி, ஆர்த்தி அண்ணாதுரை, அபர்ணா தர்மர்.




ஆசிரியர் திரு சக்திவேல் கார்த்திகேயன்

சுவேதா புகழேந்தி, அனுமீனா சொர்ணா, நிகில்கணேஷ் வரதராஜன்,

நாகார்ஜுன் இளங்கோவன், அருண்குமார் செந்தில்குமார்




ஆசிரியை திருமதி சிவகாமி அண்ணாதுரை

வித்யா வெங்கடகணேசன், ராம்கிஷோர் சுதர்சன்



ஆசிரியர் திரு வேதா வேதையன்

கோகுல் தாஸ், கவின் கோவிந்தராஜன், ஆன்ட்ரூ சவேரியார், ஜெயஸ்ரீ ஹரிதாஸ்




ஆசிரியர் திரு இரவி சண்முகம்


பொன்னி தீத்தாரப்பன், முகில் குருபரன், சூர்யா சண்முகம், கதிர் பச்சமுத்து, ருவேதா சித்தீக்



ஆசிரியை திருமதி. கலைச்செல்வி சூலூர்


ரோஹன் சுரேஷ், விஷ்ணு லிங்கராஜ், ஸ்ரீநாத் ஜெயராமன், தான்யா விஜயகுமார், கௌதம் முத்து, ஆனந்தி செல்வராஜு

# வகுப்பு - 1 ஆசிரியர் திரு தண்டபாணி



















**வகுப்பு - 1** **ஆசிரியை திருமதி Remi**






# வகுப்பு - 1 ஆசிரியை திருமதி Remi








# வகுப்பு - 1 ஆசிரியை திருமதி கலைச்செல்வி
















## வகுப்பு - 1 ஆசிரியை திருமதி மீனா



# வகுப்பு - 1










## ஆசிரியை

## திருமதி மீனா


# வகுப்பு - 1அ

## ஆசிரியை திருமதி அருணா

என் மீன் தொட்டி

என் மீன் தொட்டியில் மூன்று மீன்கள் உள்ளன. அவைகளின் பெயர் பென்னி, பிங்கி, க்னோவி. நான் தினமும் மீன்களுக்கு தீனி போடுவேன்.

பெயர்: அனிக் சஜீவ
ஆசிரியர்: அருணா
வகுப்பு: 1 அ
Name: Anit Sajeeva
teacher: Aruna
class: 1 A




பெயர் : பாவணா சிவாசன
வகுப்பு : 1A
ஆசிரியர் : அருணா

என் பெயர் பாவண்ணா சிவாசன.

நான் 1A வகுப்பில் படிக்கிறேன். எனக்கு தமிழ் கற்றுக் கொள்ள மிகவும் பிடிக்கும்.

என் பாட்டி தாத்தா விடம் பேசுவதற்க்கு தமிழ் ரொம்ப உதவியாக இருக்கிறது.

பெயர் : சந்தோஷினி ராதாகிருஷ்ணன்
ஆசிரியர் : அருணா தர்மர்
வகுப்பு : 1அ
NAME : SANTHOSHINI RADHAKRISHNAN
TEACHER : ARUNA THARMAR
CLASS : 1A

மழலைகள்

பறவை கூண்டில்

புள்ளிமான் வலையில்

மழலை பள்ளியில்



மண் கோட்டையில் எலி

ஒரு நாள் ஒரு குடும்பம் கடற்கரைக்கு சென்றார்கள். அங்கு அவர்கள் ஒரு மண்கோட்டை கட்டினார்கள். பின்னர் மதிய சாப்பாடு சாப்பிட போனார்கள். அப்போது அவர்களுக்கு ஒரு யோசனை தோன்றியது, அந்த மண்கோட்டையில் ஒரு எலி வளர்த்தால் என்ன என்று. வளர்ப்பு பிராணி கடைக்கு போய் ஒரு எலி வாங்கி வந்தார்கள். அப்பொழுது ஒரு பெரிய அலை வந்து மண்கோட்டையை இடித்து விட்டது. கொஞ்ச தூரம் தள்ளி போய் கடல் அலை வராத இடத்தில் புதிதாக ஒரு மண்கோட்டை கட்டினார்கள். அதைப் பார்த்த எலி அந்த கோட்டைக்குள் ஓடிப்போய் விளையாட ஆரம்பித்தது. எலி அதன் கோட்டையில் சந்தோசமாக வாழ்ந்தது. அந்த குடும்பம் மகிழ்ச்சியாக வீட்டிற்கு திரும்பினார்கள்.



Name: SriRaam Kumar
பெயர்: ஸ்ரீராம்
ஆசிரியர்: அருணா தர்மர்
வகுப்பு: 1A








## வகுப்பு - 1அ ஆசிரியை திருமதி அமுதவல்லி







# வகுப்பு - 1அ




## ஆசிரியை

## திருமதி அமுதவல்லி



# வகுப்பு - 1அ    ஆசிரியர் திரு. காசி

பெயர்- அனிஷ்


நாலு சக்கர வண்டி


நாலு சக்கர வண்டி
சிவப்பு நிற வண்டி
அழகாக இருக்கும்
வேகமாக செல்லும்!
ஊரை சுற்றி காட்டும்
என் சொகுசு வண்டி

பெயர்- அனிஷ் சுரேஷ்
ஆசிரியர்- காசி



Name- Anish Suresh
teacher- Kasi
Azhakanandam





என் செல்ல பிராணி - மீன்
இவன் பெயர் ப்டா சேட். இவன் நிறம்
சிவப்பு. பேட்டா மீன் வகை. இவன்
சண்டையில் வல்லவன். மற்ற
மீன்களிடம் சண்டை போடுவான்.
என் தம்பி மீன்-பேட்டா. அவன் பெயர்-
டபரா ஜ்

## நான் யார்?

பல வண்ணம் கொண்டவன்
துள்ளி துள்ளி குதிப்பவன்
குட்டியாகவும் இருப்பேன்
பெரிதாகவும் இருப்பேன்
நிலத்திலும் இருப்பேன்
நீரிலும் இருப்பேன்
தொட்டால் வழுக்கி செல்வேன்
பூச்சி தின்ன பிடிக்கும்
பாம்பை கண்டால் எனக்கு பயம்
நான் யார்?

பெயர்: சந்ஜித் ஸ்ரீராம்
ஆசிரியர்: காசி

பதில்: தவளை
NAME : Sanjit Sriram
TEACHER: Kasi






## வகுப்பு - 1அ

## ஆசிரியர்


## திரு. காசி


## வகுப்பு - 1அ ஆசிரியை திருமதி. லலிதா



# வகுப்பு - 1அ








ஆசிரியை


திருமதி. லலிதா




# வகுப்பு - 1அ ஆசிரியை திருமதி. சபிதா








# வகுப்பு - 1அ ஆசிரியர் திரு. சீனிவாசன்



எரின் வால்டர் Erin Walter ஆசிரியர்: சீனிவாசன்
வகுப்பு :- 1 A

மிருகக்காட்சி சாலை

எனது குடும்பத்தினருடன் நான் மிருகக்காட்சி சாலைக்கு சென்றிருந்தேன். அது ஒரு மணி நேர பிரயாணம். எனது உறவினர்களும் அங்கு வந்திருந்தனர். அங்கு முதல் பிரிவான சதுப்பு நிலப்பகுதிக்கு சென்றிருந்தோம். அங்கே பாம்பு, முதலை ஆமை மற்றும் பல ஊர்வனவற்றை காணக்கூடியதாக இருந்தது. அடுத்ததாக நாம் ஆபிரிக்க வனவிலங்குப் பகுதிக்கு சென்றோம். அங்கு ஒரு பாலைவனப்பகுதியை காணக்கூடியதாக இருந்தது. அத்துடன் அங்கு ஒட்டகச்சிவிங்கி, வரிக்குதிரை, யானை, குரங்கு, சிங்கம், புலி போன்ற மிருகங்களையும் காணக் கூடியதாக இருந்தது. இவ்வாறான அரிய காட்சிகளை நாம் புகைப்படங்கள் பிடித்தோம். ஒரு இடத்திலிருந்து இன்னுமொரு இடத்திற்கு செல்வதற்கு நாம் புகையிரத வண்டி மூலம் பயணம் செய்தோம். அது ஒரு மிகவும் உற்சாகமூட்டும் பிரயாணமாக அமைந்திருந்தது. இவ்வாறாக எல்லா இடங்களையும் சுற்றிப்பார்த்துவிட்டு இறுதியாக எமது வாகனத்தை அடைந்த போது மாலை வேளையாகி இருந்தது. ஒரு அருமையான நாளை எனது குடும்பத்தினருடனும் உறவினர்களுடனும் செலவழித்த திருப்தியில் வழிப்பயணத்தின் போது நான் நன்றாக உறங்கிவிட்டேன். இது எனக்கு ஒரு மறக்கமுடியாத அனுபவத்தை கொடுத்தது.



அபிஷன் சதீஷன்
வகுப்பு 01 A
ஆசிரியர் - சீனிவாசன்


நான் வளர்க்கும் செல்லப் பறவை

நான் ஒரு செல்லப் பறவை வளர்த்து வருகிறேன். அதன் பெயர் மாரியோ. மாரியோ மிகவும் அழகான பறவை. தலையில் ஒரு அழகான கொண்டை வைத்திருக்கும். அது தனியாய் உள்ளது "கீ, கீ" எனக் கத்தும்.

நான் பாடசாலை விட்டு வீட்டுக்கு வந்தால், மாரியோ சிறகுகளை அடித்து அங்குமிங்கும் பறக்கும்.

நான் மாரியோவை சிறு வயதில் இருந்து வளர்த்து வருகிறேன். எனது மாரியோவை எனக்கு நன்றாகப் பிடிக்கும்.






மெரினா கடற்கரை

சென்னை நகரம் எனும் ஊரில்
அண்ணா சாலை எனும் வீதியில்
உள்ள கடற்கரை ஓரத்தில்
அதன் பெயர்தான் மெரினா
கடற்கரை ஆகும்.

மாணவி : ராஷ்மி ராமகிருஷ்ணன்
வகுப்பு : 1A
ஆசிரியர்: சீனிவாசன் ...



திருக்குறள்

திருக்குறள் உலகப்புகழ் பெற்ற இலக்கியமாகும். இதனை இயற்றியவர் திருவள்ளுவர். இதில் 1330 குறள்கள் பத்து பத்தாக 133 அதிகாரங்களின் கீழ் தொகுக்கப் பெற்றுள்ளன. இது ஒரு மிகச்சிறந்த வாழ்வியல் நூல்.


பெயர் : சேஷாந்த் விஜயகுமார் Sheshanth Vijayakumar
வகுப்பு : 1 அ
ஆசிரியர் : சீனிவாசன்

# வகுப்பு - 1அ ஆசிரியை திருமதி. செல்வி
















## வகுப்பு - 1அ

### ஆசிரியை

### திருமதி. செல்வி

## வகுப்பு - 1அ ஆசிரியர் திரு. வேலப்பன்






## ரோஜா மலர்!

வினிதாஹரிணி
ரவிவர்மா
Vinitaharini Ravivarma
வகுப்பு 1A பிரிவு
ஆசிரியர்: திரு வேலப்பன்

பூ என்றால் எனக்கு மிகவும் பிடிக்கும்.
மலர்களில் எனக்கு மிகவும் பிடித்தமான மலர் ரோஜா
அதன் அழகே அழகு!
ரோஜாவின் மணம் ரொம்பவும் என் மனதிற்கு பிடித்தமானது.
சிவப்பு நிறம் கொண்ட ரோஜாமலர்களும் அதன்
நறுமணமும் எனது விருப்பமானவை.
என் வீட்டில் எல்லா நிறங்களிலும் ரோஜா
செடிகள் இருந்தன.
என் வீட்டு தோட்டத்தில் இருந்து
ரோஜா மலர் பறித்து பூ செண்டு செய்து என்
வீட்டை அழகுபடுத்தினேன்



நன்றி ♥ வனிதா ♥

# வகுப்பு - 1அ

## ஆசிரியர்

## திரு. வேலப்பன்

# வகுப்பு - 1ஆ ஆசிரியர் திரு. கார்த்திகேயன்

## நன்றி நன்றி

நான் நமது கேரி தமிழ் பள்ளி மற்றும் என் வகுப்பு ஆசிரியர்/சக ஆசிரியர்களுக்கு மிக்க நன்றி சொல்ல விரும்புகிறேன். ஆசிரியர்கள் மற்றும் தமிழ் சங்க உறுப்பினர்களின் கடுமையான முயற்சியால் மாணவர்கள் தமிழ் நன்றாக கற்றுக் கொண்டு வருகிறார்கள். விடுமுறையில் இந்தியா செல்லும் பொழுது தமிழ் படிக்கவும், உறவினர்களுடன் பேசுவதற்கும் மிகவும் உதவியாக இருக்கும். இந்த அனுபவத்திற்கு என் ஆசிரியருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

பெயர் - அக்ஷரா அனந்தகிருஷ்ணன்

வகுப்பு - 1 B

ஆசிரியர் - திரு. கார்த்திகேயன்

## சொர்க்கம்

சொர்க்கம் எப்படி இருக்கும்?
அம்மாவிடம் கேட்டேன்.
அம்மா சொன்னார்,
சொர்க்கம் அமைதியாக இருக்கும்
அழகாக இருக்கும்.
நல்லவர்கள் இருப்பார்கள்.

அம்மா சொன்னார்,
சொர்க்கத்துக்கு செல்ல
பிறருக்கு நல்லது செய்ய வேண்டும்
பொய் சொல்ல கூடாது
பெரியவர்களை மதிக்க
வேண்டும்.

எனக்கும் ஆசை வந்தது
இந்த உலகம் சொர்க்கமாக வேண்டும்

– ஆரணி பங்கிராஜ்
– கார்த்திகேயன் நாகலிங்கம்




கழுகுக்கு கூர்மையான கண் பார்வை உள்ளது. வெகு தூரத்திலிருந்து கொண்டே மீன்களை கழுகினால் மிக நன்றாக பார்க்க முடியும். ஒரே நேரத்தில் இதனால் முன்நோக்கியும் பக்கவாட்டிலும் பார்க்க முடியும். கழுகுக்கும் மனிதர்களை போன்றே பெரிய கண்கள் உள்ளது ஆனால் அதற்கு நம்மைவிட பார்க்கும் திறன் நான்கு மடங்கு அதிகமாகவே உள்ளது.

கார்த்திகேயன் வருண் 1ஆ

# உடல் உறுப்புகள்

நீங்கள் உங்களுடைய உடல் உறுப்புகள் பற்றி யோசித்து இருக்கிறீர்களா? உங்களுடைய கை, கால், கண் மற்றும் காது பற்றி நான் கூறுகிறேன்

**கை**

நீங்கள் உங்களுடைய கை உடன் நிறைய காரியங்கள் செய்ய முடியும். கை உடன் நீங்கள் கரண்டி எடுக்கலாம். கால் பந்து விளையாடும் போது கோல்கீப்பர் ஆக விளையாடும்போது நீங்கள் கையுடன் பந்தை தடுத்து நிறுத்தலாம்.

**கால்**

உங்களுடைய கால் மிகவும் பயன் உள்ளது. நீங்கள் நடப்பதற்கு உதவுகிறது. கால் பந்து விளையாடும் போது நீங்கள் அடிக்கலாம்.

**கண்**

உங்களுக்கு தெரியுமா கண் மிகவும் முக்கியம். கண் தெரியவில்லை என்றால் நீங்கள் எல்லாவற்றிலும் மோதி விடுவீர்கள்

# வகுப்பு - 1ஆ ஆசிரியர் திரு ஜேம்ஸ்

பைரவி ஜெயராமன்
வகுப்பு: 1ஆ
ஆசிரியர்: சவேரியார்

## கேளிக்கை பூங்கா

ஒரு நாள் என் அப்பா நாம் எல்லோரும் கேளிக்கை பூங்கா போகலாம் என்று சொன்னார். என் அக்காவும், என் தம்பியும், நானும், மிக உற்சாகத்துடன் கிளம்பினோம்.

கேளிக்கை பூங்காவில் நிறைய சவாரிகள் இருந்தது. அப்பா பணம் கொடுத்து சவாரிசீட்டு வாங்கினார். நாங்கள் முதலில் "டொம்மைகார்" சவாரி சென்றோம். சவாரி வழியில் நாங்கள் பாலம், குகை, மற்றும் பல இடங்கள் வழியே சென்றோம். அதன் பிறகு "லேசர் டேக்" மற்றும் பல சவாரிகள் செய்து முடித்தோம். பின்னர் பீட்ஸாவும், ஐஸ்கிரீமும், சாப்பிட்டோம். எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.





வகுப்பு: 1 ஆ
சஹானா கதிரவன்
ஆசிரியர்: சவேரியார்
Chahaana Kathiravan

**எனக்கு பிடித்த நாள்**

ஜனவரி 2014

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

ஒவ்வொரு ஆண்டும், நான் என் பிறந்தநாளை மிகவும் சிறப்பாக கொண்டாடுவேன். என் பிறந்தநாள் ஜனவரி 17-ஆம் தேதி. அன்று, நான் புத்தாடை அணிவேன். என்னுடைய உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் என் வீட்டிற்கு வருவார்கள். எனக்கு நிறைய பரிசு பொருட்கள் கிடைக்கும். நான் என் நண்பர்களுடன் நீண்ட நேரம் சேர்ந்து விளையாடுவேன். பிறகு, அனைவருடனும் கேக் வெட்டி சாப்பிடுவேன். இதன் காரணமாக, என் பிறந்தநாள் எனக்கு மிகவும் பிடித்த நாள்!

# வகுப்பு - 1ஆ ஆசிரியர் திரு ஜேம்ஸ்

வகுப்பு :1ஆ(1B)
ஆசிரியர்: சவேரியார்

## கிட்டார்

சாரங்கா ராஜகோபாலன்
Saranga Rajagopalan



இந்த இசை கருவியை கண்டுபிடித்தவர் ஸ்விட்சர்லாந்து நாட்டை சேர்ந்த ஏடால்ப் ரிக்கென்பாக்கர். கிட்டாரில் ஆறு கம்பிகள் இருக்கிறது. கிட்டாரில் மூன்று வகை இருக்கின்றன. அவை:

- ஒலி கிட்டார் (Acoustic guitar)
- மின்சார கிட்டார் (Electric guitar) மற்றும் பேஸ் கிட்டார்.

அதில் மின்சார கிட்டார் மிகவும் பிரபலமானது.

---

டேவிட் சவேரியார்
வகுப்பு-1ஆ

எனக்கு நீச்சல் மிகவும் பிடிக்கும். நான் நீச்சல் பயிற்சிக்கு செல்கிறேன். முதலில் நீச்சல் கடினமாக இருந்தது. பிறர் உதவியுடன் முதலில் நீந்தினேன். இப்போது பிறர் உதவியின்றி நீந்துகிறேன். நான் இப்போது தண்ணீரில் குட்டிக்கரணம் போட முயற்சி செய்கிறேன்.



---

புனித் பரமேஸ்வரன்
சவேரியார்; வகுப்பு 1B

எனக்கு பிடித்த பாட்டு

அம்மா இங்கே வா வா
ஆசை முத்தம் தா தா
இலையில் சோறு போட்டு
ஈயை தூர ஓட்டு
உன்னைப் போன்ற நல்லார்
ஊரில் யாவர் உள்ளார்?



---



## தீபாவளி


பெயர்: பூர்வஜா சந்திரமௌலி
ஆசிரியர்: சவேரியார்
Name: Poorvaja Chandramouli

எனக்கு பிடித்த பண்டிகை தீபாவளி. தீபாவளி அன்று நான் தீபங்கள் ஏற்றுவேன். நான் மத்தாப்பும் பட்டாசும் வெடிப்பேன். என் குடும்பத்தோடு இனிப்பு சாப்பிடுவேன். என் குடும்பத்தோடு புத்தாடை அணிந்து கோவிலுக்கு செல்வேன்.



# வகுப்பு - 1ஆ ஆசிரியை திருமதி. சௌம்யா









# வகுப்பு - 1ஆ ஆசிரியை திருமதி. விசயலெட்சுமி

## பாம்பு

உலகில் 2500க்கும் மேலான பாம்பு வகைகள் உள்ளன. அவற்றில் தோராயமாக நானூறு வகையான விஷ பாம்புகள் உள்ளன. வரலாறு அறிந்து 49அடி பாம்பு தான் மிகவும் நீளமான பாம்பு. இரண்டாம் நீளமான பாம்பு 33அடி. இதை விட நீளமான பாம்பு இருக்கலாம். ஆசியாவின் சில பகுதியில், பாம்பு ஒரு வகையான உணவு. பாம்பு அதுவாக மக்களை தாக்காது. பாம்பு தன்னை தாக்கப் போகிறார்கள் என்று பயப்படும் பொழுது தான் அது நம்மை தாக்கும்.

Avinash Vijayakumar - 1B
அவினாஷ் விஜயகுமார் - 1B
ஆசிரியர் - விஜி

S. Name: AVINASH JAYAKUMAR
அவினாஷ் ஜெயக்குமார் நம்ம வீரர்கள்
Teacher: Mrs. Viji

நம்ம வீரர்கள் நம்ம வீரர்கள்
மைதானத்தில் இறங்கினா [illegible]!

நம்ம வீரர்கள் நம்ம வீரர்கள்
களத்தில இறங்கினா [illegible]!

நம்ம வீரர்கள் நல்ல வீரர்கள்
களத்தில இறங்கினா ஜெயிக்க வைப்பாங்க!

நம்ம வீரர்கள் [illegible] வீரர்கள்
ரசிகர் மனதை [illegible]!

நம்ம வீரர்கள் [illegible] வீரர்கள்
அரங்கத்தை [illegible]!

நம்ம வீரர்கள் வெற்றி வீரர்கள்
இந்தியாவின் பெருமையை நிலைநிறுத்துவாங்க!




## வண்ணத்துப்பூச்சி

அழகு கொஞ்சும் வண்ணத்துப்பூச்சி
ஆடி மகிழ்வேன் உன்னைப்பார்த்து
இங்கும் அங்கும் பறந்து செல்வாய்
[illegible] அழகு நிறத்தில்
உலகில் உன்னைப்போல் அழகில்லை
ஊர் ஊராய் சுற்றித் திரிவாய்
என்றும் ஆனந்தம் உன்னைக்கண்டால்
[illegible] பறந்தாய் என்னைப் பார்த்து
பயமின்றி மெதுவாக தத்தித் தத்தி
தெரியாமல் மறையாமல் [illegible]
ஓடி ஓடி என் அருகில் வந்திடுவாயா?

## இந்தியா

பெயர் - [illegible]
வகுப்பு - 1ஆ
ஆசிரியர் - விஜி ராஜேஷ்



இந்தியா ஒரு பெரிய நாடு. இது மக்கள் தொகையில் இரண்டாவது இடத்தில் உள்ளது. இங்கு பலவித கலாச்சாரம், மொழி, மதம் உள்ளன. இந்தியாவின் தலைநகரம் புது தில்லி. மூன்றாவது உயர்ந்த மலை கஞ்சன்ஜங்கா இங்கு உள்ளது. மகாத்மா காந்தி இந்தியாவின் சுதந்திரத்திற்கு போராடினார். 1947 இல் இந்தியாவிற்கு சுதந்திரம் கிடைத்தது.

# வகுப்பு - 2அ ஆசிரியை திருமதி. அல்லி

வகுப்பு : 2 அ
ஆசிரியர் : அல்லி தாள்

## எட்டாத பழம் புளிக்கும்

அனிருத்தா முரளி

ஒரு ஊரின் பக்கத்திலே ஒரு காடு இருந்தது. அக்காட்டிலே பல நரிகள் வசித்தன. அவற்றுள் ஒரு கிழ நரியும் இருந்தது. அந்த நரி பசியில் அலைந்து திரிந்தது. ஒரு திராட்சைத் தோட்டத்திற்கு வந்தது. அங்கே இருந்த பழங்களைத் தின்ன ஆசைப்பட்டது.

அந்த நரி எட்டி எட்டி குதித்தது. அதற்குப் பழங்கள் எட்டவில்லை. "சீ, இந்தப் பழங்கள் புளிக்கும். எனக்கு வேண்டாம்." என்று சொல்லிக் கொண்டு நரி போய்விட்டது.



## பேராசை பெரும் நஷ்டம்

பெயர் - அந்தரா விவேக்
Name - Antara Vivek
வகுப்பு - 2A class - 2A
ஆசிரியர் பெயர் - திருமதி அல்லி
Teacher Name - Mrs. Alli



ஒரு பேராசைக்கார விவசாயி நிறைய வாத்துக்கள் வளர்த்தான். அதில் ஒரு வாத்து தினம் ஒரு பொன்முட்டை இட்டு வந்தது. விவசாயி வாத்தின் வயிற்றுக்குள் அதிகமான பொன்முட்டைகள் இருக்கும் என நினைத்தான். எல்லா முட்டைகளையும் ஒரே நாளில் எடுத்து விற்றால் பெரும் பணக்காரன் ஆகலாமே என்று எண்ணினான். உடனே ஒரு கத்தியால் வாத்தின் வயிற்றைக் கிழித்தான். ஆனால் அதன் வயிற்றில் ஒரே ஒரு பொன்முட்டை மட்டுமே இருந்தது. வாத்து இறந்ததும் தினம் ஒரு பொன்முட்டையிடும் வாத்தை கொன்றுவிட்டோமே என்று வருந்தி அழுதான்.

கேஷவ் வரதராஜன்
2அ
ஆசிரியர் : அல்லி தாள்

## மதுரை மாநகரின் பெருமைகள்

மதுரை இந்தியாவில் தமிழ் நாட்டில் தெற்குப் பகுதியில் உள்ள நகரமாகும். மதுரை என்றாலே என் பெற்றோர் எனக்கு கூறுவது இந்நகரின் சரித்திரப் பெருமையே. இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ் சங்கம் மதுரையில் தான் தோன்றியதாம். இந்நகருக்கு மதுராபுரி மற்றும் கடம்பவனம் என்றும் பெயர் பழங்காலத்தில் இருந்தது. இந்நகர் வைகை ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ளது.

மதுரை என்றாலே எனக்கு நினைவுக்கு வருவது "மீனாட்சி சுந்தரேஸ்வரர்" ஆலயம் ஆகும். இந்த ஆலயத்தில் அழகிய சிற்பங்கள், வண்ண ஓவியங்கள், ராஜகோபுரம், ஆயிரங்கால் மண்டபம் மற்றும் பொற்றாமரைக் குளம் உள்ளன. பாண்டிய மன்னர்கள் மதுரையை ஆட்சி செய்தார்கள். இங்கு உள்ள திருமலை நாயக்கர் மஹால் கலைநிறையும் தவழும். மதுரை மல்லிகை பூவிற்கும், சுங்கடிப் புடவைக்கும், கைவினைகள், பித்தளை மற்றும் வெண்கல வேலைப்பாட்டுப் பொருட்களுக்கும் பெயர் பெற்றது என்று என் அம்மா கூறுவார்.

## மதுரை மீனாட்சி அம்மன் கோவில்

மீனாட்சி அம்மன் கோவில் மதுரையில் இருக்கிறது. இது ஒரு தமிழ்க் கோவில். இதில் மீனாட்சி அம்மன், சுந்தரேஸ்வரர் இருக்கிறார்கள். இதில் 14 கோபுரங்கள் இருக்கிறது. பொற்றாமரைக்குளம் இதில் இருக்கிறது. இதில் ஆயிரங்கால் மண்டபம் இருக்கிறது. மீனாட்சி அம்மன் திருக்கல்யாணம் சித்திரைத் திருவிழாவாக பத்து நாட்கள் வருடந்தோறும் கொண்டாடப்படுகிறது.

பத்மநாபன் சரவணன் - Padmanaban Saravanan
2A, அல்லி க்ளாஸ்

பெயர்: ரதிபி சிவயோகன்
வகுப்பு: இரண்டு அ பிரிவு
ஆசிரியர்: அல்லி தாஸ்

## தாஜ்மஹால்

தாஜ்மஹால் உலகப் புகழ் பெற்ற அன்பின் சின்னமாகும். தாஜ்மஹால் ஷாஜகான் என்ற அரசனால் மும்தாஜ் என்ற மூன்றாவது மனைவிக்காக கட்டப்பட்டது. தாஜ்மஹால் ஆயிரத்து அறுபத்து மூன்றாம் ஆண்டு கட்டப்பட்டது.

1983-ஆம் ஆண்டு உலகப்பாரம்பரியத்தை காக்கும் அமைப்பு (UNESCO) ஏழு அதிசயங்களில் ஒன்றாக அறிவித்தது. தாஜ்மஹாலின் சிறப்பம்சம் முழுவதும் பளிங்கு கற்களால் கட்டப்பட்டது. இது மிகவும் கடினமான கட்டிடக்கலை நுட்பம் பெற்றது. தாஜ்மஹால் கட்டிடத்தை மற்றும் மிகவும் சிறப்பான ஓவியத்தை நிபுணர்களால் கட்டப்பட்டது. தாஜ்மஹால் இந்தியாவில் உள்ள ஆக்ராவில் யமுனா நதிக்கரையில் அமைந்துள்ளது. இது ஏழு உலக அதிசயங்களில் ஒன்றாக விளங்குகின்றது.



# வகுப்பு - 2அ

# ஆசிரியை

# திருமதி. அல்லி

# வகுப்பு - 2அ ஆசிரியர் திரு. பாரத்

அனிஷா சிவயோகன் - Anisha Sivayogan
வகுப்பு: 2A ஆசிரியர்: பாரத் ராமமூர்த்தி

## பண்டாரவன்னியன்

ஈழப் போரின் இறுதி யுத்தம் நடந்த இடமான வன்னியை இறுதியாக ஆண்ட தமிழ் மன்னன் குலசேகரம் வைரமுத்து பண்டாரவன்னியன் ஆவான். இவனின் ஆட்சிக் காலம் ஒல்லாந்தர் காலத்துப் பிற்பகுதியும் பிரித்தானியர் காலத்து முற்பகுதியுமாகும். போர்த்துக்கேயர் 1621 இல் யாழ்ப்பாணத்தைப் பிடித்தனர் ஆனால் அவர்களால் வன்னிக்குள் நுழைய முடியவில்லை. பின்னர் 1782 இல் ஒல்லாந்தரும் 1796 இல் பிரித்தானியர்களும் வன்னியின் சிலபகுதிகளைக் கைப்பற்றினர். பண்டாரவன்னியன் ஒரே நேரத்தில் ஒல்லாந்தருக்கும், பிரித்தானியர்களுக்கும் எதிராகப் போராடினான். அவன் மரபு வழிச் சண்டையிலிருந்து கெரில்லா யுத்தமுறைக்கு மாறினான். அவர்கள் மன்னார் மற்றும் திருகோணமலையில் இருந்த ஒல்லாந்தரைத் தாக்கியதோடு யாழ்ப்பாணத்தையும் உலுக்கித் தாக்கினார்கள். பண்டாரவன்னியன் பிரித்தானியரின் முல்லைத்தீவு ஆயுதசாலை, முல்லைத்தீவுக் கோட்டை என்பவற்றைக் கைப்பற்றி பீரங்கிகளை அபகரித்தோடு பிரித்தானியர்களையும் அங்கிருந்து வெளியேற்றினான். பின்னர் பிரித்தானியர்கள் நவீன படையுடன் யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை ஆகிய இடங்களில் இருந்து ஒரே நேரத்தில் தாக்கினர். வன்னியின் தலைநகரான வாவெட்டிமலையைக் கைப்பற்றினர். பண்டாரவன்னியன் தப்பியோடி கற்சிலைமடு என்ற இடத்தில் ஒளிந்துள்ளான். அப்போது வன்னியின் இன்னொரு மன்னனான காக்கைவன்னியனால் தனிப்பட்ட பகையால் வஞ்சகமாகக் காட்டிக் கொடுக்கப்பட்டு 10-31-1803 அன்று கொல்லப்பட்டான். சிறந்த வீரன் ஒருவனை தமிழ் மண் இழந்தது.

பெயர் : உமேஷ் ராதாகிருஷ்ணன்
ஆசிரியர் : பாரத்
NAME : UMESH RADHAKRISHNAN
TEACHER : BHARATH
CLASS : 2A

## கிளி

தினம்
எதிர்காலம்
என்னவென் தெரியாமல்
அடுத்தவர்கள்
எதிர்காலத்தைப்பற்றி
சொல்லி கொண்டிருந்தது
கூண்டுக்குள்
அடைப்பட்ட
கிளி!



# வகுப்பு - 2அ　　ஆசிரியர் திரு. பாரத்

## தூங்கும் விதம்



ஒட்டைச் சிவிங்கி நின்று கொண்டே
நன்று தூங்கிடும்.
உயரே வௌவால் தலைகீழாகத்
தொங்கித் தூங்கிடும்.
சிட்டுக் குருவி மரத்தின் கிளையைப்
பற்றித் தூங்கிடும்.
சின்ன பாம்பா தொட்டிக்குள்
பதிந்து தூங்கிடும்.
கண்ணை மூடி நாமெல்லாரும்
நன்கு தூங்குறோம்.
கண்ணைத் திறந்தபடியே மீனும்
பாம்பும் தூங்கிடும்.
என்ன காரணத்தினாலே
என்று தெரியுமா?
இவைகளுக்குக் கண்ணை மூட
இமைதான் இல்லையே!

அ.கு. [illegible]
நித்தின் ஹரிதாஸ்









---

2.அ ஷ்யாம் ரவிச்சந்திரன்
Shyam Ravichandran



## மகாத்மா காந்தி

பிறப்பு: அக்டோபர் 02, 1869
இடம்: போர்பந்தர், குஜராத், இந்தியா
பணி: இந்திய விடுதலைப் போராட்ட வீரர், அரசியல் தலைவர்
இறப்பு: ஜனவரி 30, 1948

"மகாத்மா காந்தி" என்று அன்புடன் அழைக்கப்படும் "மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி" இந்திய விடுதலைப் போராட்டத்தைத் தலைமையேற்று நடத்திய மாபெரும் சுதந்திரப் போராட்ட வீரர் ஆவார். இவரது அறவழி போராட்டம் இந்திய மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியது மட்டுமல்லாமல் இந்திய நாடு விடுதலைப் பெறவும் முக்கியக் காரணமாக அமைந்தது. தன் வாழ்வை நாட்டின் விடுதலைக்காக அர்ப்பணித்தவர் மகாத்மா காந்தி ஆவார். ஒவ்வொரு வருடமும் இவருடைய பிறந்தநாளான அக்டோபர் 02 ஆம் தேதியை காந்தி ஜெயந்தியாக கொண்டாடுகிறோம்.

---

பெயர்: மதுமதி இளங்கோ
ஆசிரியர்: பரத்
வகுப்பு: 2B

செந்தோசாவுக்குச் சென்றோம்.
மிதிவண்டி ஓட்டினோம்.

கடற்கரையில் கால் பந்து
காலால் உதைத்து ஆடினோம்.

கடலடி உலகத்தில்
மீன்களையும் பார்த்தோம்.

டால்பின் வித்தைகளைக்
கண்டு நாங்கள் ரசித்தோம்.

மணல்வீடு கட்டுவதை
மகிழ்ச்சியோடு பார்த்தோம்.

---

## சென்னையில் எனக்கு பிடித்த சில விசயங்கள்...

பெயர்: சாதனா சீனிவாசன்
ஆசிரியர்: பாரத் ராமமூர்த்தி
வகுப்பு: 2அ
Name: Sadhana Srinivasan
Teacher: Bharath Ramamurthy
Class: 2A

- மால் - எக்ஸ்ப்ரஸ் அவென்யூ
- கடற்கரை - காந்தி சிலை கடற்கரை
- இடம் - பாட்டி வீடு
- பழம் - தாத்தா வாங்கி வரும் மாம்பழம்
- உணவு - சரவண பவன் ஆப்பம்
- இனிப்பு - ஸ்ரீ மிதாய்குலோப் ஜாமூன் மற்றும் மாம்பழ மூஸ்
- உணவகம் - சரவண பவன்
- மலர் - சாலை ஓரம் இடைக்கும் மல்லிப்பு
- கோயில் - புரைசைவாக்கம் கங்காதீஸ்வரர் கோயில்
- பொழுது போக்கு - சாலைகளில் இருக்கு நாய்களை பார்புது

# வகுப்பு - 2அ ஆசிரியை திருமதி. பத்மப்பிரியா




## ~கோலங்கள்~

பெயர்: ஸ்ருதி
ஆசிரியர்: பத்மப்பிரியா
Name: Shruthi Subramanian
Teacher: Padmapriya
வகுப்பு : 2 அ

கோலங்கள் வரைதல் ஒரு பாரம்பரிய கலை. கோலங்கள் வெவ்வேறு நிற பொடிகள் பயன்படுத்தி வரையப்படும். இது வளைந்த கோடுகள் மற்றும் புள்ளிகள் கொண்ட ஒரு சித்திரம் ஆகிறது. இது இந்தியா முழுவதும் பெண்களால் வரையப்படுகிறது. கோலங்கள் சுபீட்சத்தை கொண்டுவரும் என்று நம்பப்படுகிறது. கோலங்கள் வரையும் பாரம்பரியம் என்றென்றும் தொடரும்.



## நவராத்திரி

இந்தியா முழுவதும் கொண்டாடப்படும் பண்டிகை நவராத்திரி. "நவராத்திரி" என்றால் ஒன்பது ராத்திரிகள் என்று அர்த்தம். முதல் மூன்று நாட்கள் துர்கைக்கும், அடுத்த மூன்று நாட்கள் இலட்சுமிக்கும், கடைசி மூன்று நாட்கள் சரஸ்வதிக்கும் கொண்டாடப்படுகிறது.

முதல் ஐந்து படிகளில் செடி கொடிகள், நத்தை, எறும்பு, விலங்கு, பறவை போன்ற உயிரினங்களும் அடுத்த இரண்டு படிகளில் மனிதர்கள், மகரிஷிகள், கடைசி இரண்டு படிகளில் மும்மூர்த்திகள் மற்றும் துர்கை, இலட்சுமி, சரஸ்வதி ஆகியோரின் பொம்மைகளை வைத்து தினமும் ஒரு சுண்டல் படைத்து வழிபடுவர்.



ஸ்ரீமன் பத்ரி
2 அ
பத்மப்பிரியா

## கோலங்கள்

கோலங்கள் பல வகைப்படும். அதில் முக்கியமானவை கம்பிக் கோலம் மற்றும் புள்ளிக் கோலம். தமிழ்நாட்டில் பண்டிகைக் காலங்களில் கோலங்கள் போடுவார்கள்.



பொங்கல் திருநாள் - ஜல்லிக்கட்டு

பொங்கல் திருநாள் தமிழர்களின் திருநாள். இது உழவர்களுக்கு உதவிய அனைத்திற்கும் நன்றி தெரிவிக்க மக்கள் பொங்கல் கொண்டாடும் திருநாள். அன்று ஜல்லிக்கட்டு விளையாட்டு [illegible] நடைபெறும். ஜல்லிக்கட்டு என்பது மாடுகளை அவிழ்த்து விரட்டி ஓட விடுவர். அதன் கொம்புகளில் பரிசுகள் கட்டப்பட்டிருக்கும். வீரமிக்க இளைஞர்கள் அந்த காளைகளை அடக்கி அதன் கொம்புகளில் இருக்கும் பரிசுப் பொருளை எடுக்க முயற்சி செய்வர். இதில் பலர் காயமடைவதுண்டு. ஆனாலும் இந்த விளையாட்டு தமிழர்களின் வீர விளையாட்டாக இன்றும் தொடர்கிறது.



பெயர்: கார்த்திக்
NAME: KARTHIK
ஆசிரியர்: பத்மபிரியா
வகுப்பு: 2அ

## பொங்கல்



பொங்கல் பண்டிகை தமிழர்களுக்கு முக்கியமான பண்டிகை ஆகும். இது அறுவடைத் திருநாள் என்றும் கூறப்படும். பொங்கல் என்பதற்கு பொங்கிப் பெருகி வருவது என்று பொருள். பொங்கல் பண்டிகை நான்கு நாட்களுக்கு கொண்டாடப்படுகிறது. முதல் நாள் பழைய பொருட்களை கழியும் போகி பண்டிகை. இரண்டாவது நாள் புதுப்பானை எடுத்து மஞ்சள் கொத்தை பானையை சுற்றி கட்டி, சூரியன் இருக்கும் திசையை நோக்கி பொங்கலிட்டு கொண்டாடப்படுகிறது. மூன்றாவது நாள் மாட்டு பொங்கல் கிராமங்களில் விமரிசையாக கொண்டாடப்படுகிறது. நான்காவது நாள் உறவினர்களைக் கண்டு வாழ்த்துக்களை பரிமாறும் காணும் பொங்கலாக கொண்டாடப்படுகிறது.

பெயர்: அஷ்வத் அருண்
NAME: ASHWATH ARUN
வகுப்பு: 2அ
ஆசிரியர்: பத்மபிரியா

# வகுப்பு - 2அ ஆசிரியை திருமதி. சுஜாதா

## திருக்குறள்

திருக்குறள் தமிழ் சங்க காலத்தில் [illegible]
திருக்குறள் 133 அதிகாரங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.
[illegible]
அறம், பொருள், இன்பம்
அறம் 38 அதிகாரம் உள்ளன
பொருள் 70 அதிகாரம் உள்ளன
இன்பம் 25 அதிகாரம் உள்ளன
ஒவ்வொரு அதிகாரமும் 10 குறள் கொண்டது.
இது மொத்தம் 1330 குறள் [illegible]
[illegible]
[illegible]

— ரேஜா லெவின்
Reja Levin
2அ : சுஜாதா மோகன்





## ஏணியின் பயன்கள்

ஏணி உயரமான இடத்திற்கு செல்ல உதவும். உதாரணமாக, உயரமான மரம் சிலவற்று வீட்டின் கூரை ஏணி உயிரையும் காக்கும். உதாரணமாக, நீங்கள் ஐந்து மாடி வீட்டில் இருக்கும் போது தீ விபத்து நேர்ந்தால், தீயணைப்பு படை வீரர்கள் ஏணி வைத்து உங்களை காப்பாற்றுவார்கள். இன்னொரு உதாரணமாக நீங்கள் கடலில் பயணம் செய்யும்போது ஒரு பெரிய சுறா தாக்கினால் கடற்படை வீரர்கள் விமானத்திலிருந்து ஏணி கொடுத்து காப்பாற்றுவார்கள்.

பெயர்: லக்ஷ்மி கோபால்ராஜ்
NAME: LAKSHMI GOPALRAJ
ஆசிரியர்: சுஜாதா மோகன்
வகுப்பு: 2அ.

# வகுப்பு - 2அ ஆசிரியை திருமதி. சுஜாதா

## உணவுகள்

ஒரு நாள் என்னுடைய ஆசிரியர் தமிழ் ஆண்டு மலர் பற்றி பேசினார். அவர் எல்லா மாணவர்களை ஒரு கட்டுரை எழுதி கொண்டு வர சொன்னார். தமிழ் வகுப்பில் இருந்து வீடு செல்லும் வரை, நான் எதை பற்றி எழுதலாம் என்று யோசித்தேன். வீட்டுக்குள் நுழைந்ததும் அம்மா செய்த இட்லி சாம்பார் மணம் என்னை சொக்க வைத்தது. அந்த நொடியில் எனக்கு பிடித்த உணவுகளை பற்றி கட்டுரை எழுதலாம் என முடிவு செய்தேன்.

எனக்கு அதிகாலையில், கோயிலில் கிடைக்கும் பொங்கல் மிகவும் பிடிக்கும். வீட்டில் கிடைக்கும் பருப்புப்பொடியும், பொரித்த அரசி அப்பளமும் அலாதி சுவை. மொறு மொறு தோசையும், தேங்காய் சட்டினியும் மிக நல்ல பொருத்தம். எனக்கு மதியவேளையில் நொறுக்குத்தீனியோடு இஞ்சி டீ குடிக்க பிடிக்கும். இரவு உணவுக்கு நான் நான்-பனீர் ரசித்து சாப்பிடுவேன். எனக்கு பிடித்த இனிப்பு வகைகள் ஏராளம் - மைசூர்பாக், ஜிலேபி, முந்திரி பருப்பு கேக், பாயசம், குல்பி, கேசரி, குலாப் ஜாமூன் ஐஸ்கிரீம்.. என்ன, உங்களுக்கும் பசிக்கிறதா???





பவானி ஜெயராமன்
Bavani Jayaraman
ஆசிரியர்: சுஜாதா மோகன்
வகுப்பு: 2அ



## இந்திரா காந்தி



நவம்பர் 19, 1917 - அக்டோபர் 31, ...

- இந்தியாவின் மூன்றாவது பிரதமர்
- இந்திய வரலாற்றில் ஒரே பெண் பிரதம மந்திரியாவார்
- இரண்டாவது நீளமான பிரதமர்
- அவர் அரசியலில் இரக்கமற்ற இருப்பது மற்றும் சக்தி மையப்படுத்தி அறியப்பட்டது
- அவர் இந்திய தேசியகாங்கிரஸ் கட்சியின் முக்கியமா உறுப்பினராக இருந்தார்
- அவர் அரசியலில் சக்தியுடன் இருந்தார்
- அரசாங்கத்தின் ஜனநாயக அமைப்புகளாக உதவினார்
- அவர் நிலக்கரி, எண்ணெய், இரும்பு, செம்பு, பருத்தி, ஜவுளி, காப்பீடு, மற்றும் வங்கி துறைகளை தேசியமயமாக்கினார்
- அவர் பாரத் ரத்னா விருது, ஜவஹர்லால் விருது, லெனின் அமைதி விருது ஆகியவை பெற்றார்

அவர் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பயின்றார்

வகுப்பு: 2அ ஆசிரியர்: சுஜாதா மோகன் பெயர்: பூஜா செல்வின்


## எனக்கு பிடித்த பாரதியார் பாட்டு: பாப்பா பாட்டு

ஓடி விளையாடு பாப்பா, - நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா,
கூடி விளையாடு பாப்பா, - ஒரு
குழந்தையை வையாதே பாப்பா.

சின்னஞ் சிறுகுருவி போலே - நீ
திரிந்து பறந்துவா பாப்பா
வன்னப் பறவைகளைக் கண்டு - நீ
மனதில் மகிழ்ச்சிகொள்ளு பாப்பா.

காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு
கனிவு கொடுக்கும்நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு - என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா.

ஆசிரியர்: சுஜாதா மோகன், 2அ
பூஜா பரமேஸ்வரன்



வகுப்பு: 2அ
ஆசிரியர்: சுஜாதா மோகன்
அஷ்வின் செந்தில்

மகாத்மா காந்தி இந்தியாவின் தேசதந்தை என அழைக்கப்படுபவர். அவர் இந்தியாவின் சுதந்திரத்திற்கு சத்தியாகிரக வழிமுறையில் போராடினார். தன் வாழ்நாள் முழுவதும் மிக எளிமையாக வாழ்ந்தார். தன் துணிகளை தானே நெய்து உடுத்தினார். இவரது பிறந்த நாளான அக்டோபர் 2ம் தேதி காந்தி ஜெயந்தி என அழைக்கப்படுகிறது. இந்தியாவின் சுதந்திரத்திற்கு பிறகு இவர் கோட்சே என்பவரால் சுட்டு கொல்லப்பட்டார்.

# வகுப்பு - 2ஆ ஆசிரியை திருமதி. சித்ரா

பெயர்: அபிஷேக் சஜீவன்
வகுப்பு: 2ஆ
ஆசிரியர்: சித்ரா
Name: Abishek Sajeevan
Teacher: Ms. Chitra

## ஔவையார்

ஔவையார் ஒரு தமிழ் பெண் புலவர். ஔவையார் என்ற பெயரில் பல புலவர்கள் பழங்காலத்தில் இருந்தார்கள். சோழர் மன்னர் காலத்தில் வாழ்ந்த ஔவை ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி போன்ற நீதி நூல்களை எழுதினார். இவை நம் வாழ்க்கைக்கு இன்றும் வழிகாட்டியாக உள்ளது. பழங்கால மன்னர்கள் புலவர்களை வாழ்த்தினர்.

## ஔவையார்

ஔவையார் ஆத்திசூடி எழுதினார். ஆத்திசூடி ஒரு வாழ்க்கைப் பாடம். ஔவையார் எந்த ஊரும் சொந்த ஊரே என எங்கும் சுற்றி வந்தார். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை எல்லோருக்கும் நல்ல வழிகளைச் சொன்னார். "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று தொடங்கும் கொன்றைவேந்தன் எழுதினார்.

தீபாலி இராஜேந்திரன்
வகுப்பு: 2ஆ
ஆசிரியை: சித்ரா [illegible]

## தமிழ் நாட்டை ஆண்ட மன்னர்கள்

இந்தியா சுதந்திரம் வாங்குவதற்கு முன் தமிழ் நாட்டை பல வகையான மன்னர்கள் ஆட்சி செய்து வந்தனர். அவர்களில் மூன்று குறிப்பிட்ட மன்னர்கள், சேரர், சோழர் மற்றும் பாண்டியர். சேர மன்னர்கள் தலைநகரம் கரூர். சோழ மன்னர்கள் தலைநகரம் தஞ்சாவூர். பாண்டிய மன்னர்கள் தலைநகரம் மதுரை. இவர்கள் தமிழ் நாட்டை ஆண்ட முப்பெரும் மன்னர்கள்.

அதிதி நாராயணன்
2B - சித்திரா

## மகாகவி சுப்பிரமணிய பாரதி

மகாகவி சுப்பிரமணிய பாரதி தமிழ்நாட்டின் தூத்துக்குடி மாவட்டத்தில் எட்டையபுரம் கிராமத்தில் டிசம்பர் 11 நாள் 1882 இல் பிறந்தார். அவர் சிறு வயதிலேயே இசை மற்றும் கவிதை எழுதுவதில் தேர்ச்சி பெற்றார். அவர் இந்திய சுதந்திர போராட்டத்தில் பங்கு பெற்றார். அவர் நாட்டுப்பற்று மற்றும் தேசிய உணர்வு மிகுந்த பாடல்களையும் கவிதைகளையும் எழுதினார். அவர் 1921 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 நாள் சென்னையில் இறந்தார். மக்கள் அவரை அன்புடன் "மகாகவி" என்று அழைக்கிறார்கள்.

அதிதி
2ஆ
ஆசிரியை: சித்ரா [illegible]

## மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் 1882, டிசம்பர் மாதம் பதினொன்றாம் நாள் தமிழ்நாட்டின் எட்டயபுரத்தில் பிறந்தார்.

பாரதியார் ஆசிரியராக பணி புரிந்தார். அவர் தமிழ் மொழியை தன் தாயாக கருதினார். அவர் காந்தியடிகள் அரவிந்தோ திலகர் போன்ற பெரியவர்களோடு சுதந்திர போராட்டத்தில் பங்கு பெற்றார்.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று தமிழ் மொழியைப் பற்றி அவர் பெருமையுடன் கூறியுள்ளார்.

"பாருக்குள்ளே நல்ல நாடு-எங்கள் பாரத நாடு." என்று இந்திய நாட்டின் பெருமையை அவர் பாடியுள்ளார்.

அவர் தனது 39ஆம் வயதில் 1921 செப்டம்பர் மாதம் 11ஆம் தேதி இறந்தார்.

- நாகம் அருண்
வகுப்பு 2ஆ
ஆசிரியர்: சித்ரா

# வகுப்பு - 2ஆ

# ஆசிரியை

# திருமதி. சித்ரா

# வகுப்பு - 2ஆ ஆசிரியர் திரு. சித்தீக்

Aakash Shanmugavel
ஆகாஷ் சண்முகவேல்
வகுப்பு: 2B
ஆசிரியர் : சித்தீக்

## "திருவள்ளுவர்"

திருவள்ளுவர் மிகவும் போற்றப்பட்ட புலவர் மற்றும் தத்துவஞானி. அவர் முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்தார். அவர் திருக்குறளை இயற்றினார்.

அவர் திருக்குறளை ஔவையாரின் துணையோடு மதுரை தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றினார். அவர் தெய்வப் புலவர், பொய்யா மொழிப்புலவர் என்ற பல சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படுகிறார்.

சென்னையில் வள்ளுவர் கோட்டமும், முக்கடல் சேரும் குமரியில் 133 அடி உயரமான திருவுருவச் சிலையும் அவரின் நினைவுச் சின்னங்களாக உள்ளன.

லண்டன் ஸ்கூல் ஆப் ஓரியண்டல் மற்றும் ஆப்ரிகன் ஸ்டடீஸ் எனும் கல்வி நிறுவனத்தில் வள்ளுவரின் திருவுருவச்சிலை நிறுவப்பட்டுள்ளது.


ஆர்த்தி சுரேஷ்
2B
Tamil class
ஆசிரியர்: சித்தீக்

## ஐம்பெரும் காப்பியங்கள்

March 7th 2014

சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, குண்டலகேசி, மற்றும் வளையாபதி நூல்கள் தமிழின் ஐம்பெரும் காப்பியங்கள். சிலப்பதிகாரம், கண்ணகி மதுரையை எரித்தது பற்றிய காப்பியம். மணிமேகலை, ஒரு நடனப் பெண்ணைப் பற்றிய வரலாறு. மணிமேகலையின் கடவுள் பக்தியினால் அமுத சுரபி எனும் பாத்திரத்தைப் பெற்றாள். சீவகசிந்தாமணி, சீவகன் என்ற மன்னனைப் பற்றிய வரலாறு. குண்டலகேசி மற்றும் வளையாபதி காப்பியங்கள் முழுமையாக நமக்கு கிடைக்கவில்லை.






# வகுப்பு - 2ஆ ஆசிரியர் திரு. சித்தீக்

அபிநயா சந்திரசேகரன்
Abinaya Santhirasegaran
வகுப்பு: 2ஆ
ஆசிரியர்: திரு. சித்தீக்

## ஔவையார்

ஔவையார் ஒரு சிறந்த தமிழ்ப் புலவர். இவர் பன்னிரண்டாம் நூற்றாண்டுக்கு முன்னர் தமிழகத்தில் வாழ்ந்தார். இவருடைய தந்தையார் பெயர் பகவன். தாயார் பெயர் ஆதி.

இவர் சிறுவர்களுக்காக ஆத்திசூடி, நல்வழி, கொன்றை வேந்தன், மூதுரை ஆகிய நூல்களை இயற்றியுள்ளார். இவை நமக்கு நல்ல அறிவுரைகளைக் கூறுகின்றன.

ஔவையார் மிகவும் எளிமையானவர். தமிழகம் முழுவதும் நடந்தே சுற்றி வந்தார். தன் சொந்த நலனை நினைக்காமல் தமிழுக்கு தொண்டு செய்தார். பல மன்னர்களுக்கு புத்திமதியும் சொல்லியிருக்கிறார். மன்னன் அதியமான் பரிசாகக் கொடுத்த கருநெல்லிக் கனியை உண்டு நீண்ட காலம் வாழ்ந்தார். முருகனிடத்தில் மிகவும் பக்தி கொண்ட இவர் மிகவும் இரக்க மனமுள்ளவர்.

ஔவைப் பாட்டி நமக்குச் சொன்ன நீதிகளைப் படித்து நாமும் நல்வழியில் நடப்போம்.

## அறுசுவை

அறுசுவை எனப்படுவது நாக்கு அறியக்கூடிய ஆறு வகை சுவைகளாகும். பழங்கால இந்திய மருத்துவங்களும், ஆயுர்வேதமும் சுவைகளை ஆறு வகைகளாகப் பிரிக்கின்றன. அவையாவன: துவர்ப்பு, இனிப்பு, புளிப்பு, கார்ப்பு, கசப்பு மற்றும் உவர்ப்பு ஆகியனவாகும். ஆயுர்வேதம் உடலின் ஆறு முக்கிய தாதுக்களுடன் இச்சுவைகளைச் சம்பந்தப்படுத்தி, உடல் வளர்ச்சியில் இச்சுவைகளின் பங்குகளை விளக்குகின்றது.

- இனிப்பு – தசையை வளர்க்கின்றது
- புளிப்பு – கொழுப்பினை வழங்குகின்றது
- கார்ப்பு – எலும்புகளை வளர்க்கின்றது
- உவர்ப்பு – உமிழ்நீரைச் சுரக்கச் செய்கின்றது
- துவர்ப்பு – இரத்தத்தைப் பெருக்குகின்றது
- கசப்பு – நரம்புகளை பலப்படுத்துகின்றது

அக்கால மருத்துவங்களும், உணவு முறைகளும் இதனை அடிப்படையாகக் கொண்டே இருந்துவந்தது. உடல் தாதுவைப் பெருக்க, சமன் செய்ய அதற்கு ஏற்றவாறு உணவு வகைகளைத் தயாரித்து வந்தனர். இதனைக் கொண்டுதான் "உணவே மருந்து, மருந்தே உணவு" என்று சொல்வார்கள்.

– கௌதம் தர்மர்
வகுப்பு – 2 ஆ
ஆசிரியர் – சித்திக்

ராஜ ராஜ

சோழன்

லோகேஸ்வரியார்
Class 2B

ராஜ ராஜ சோழன் இந்தியாவை ஆண்ட தலை சிறந்த அரசர்களில் ஒருவர். இவரது உண்மையான பெயர் அருள்மொழி வர்மன். இவரது காலம் 985 இருந்து 1014 ஆண்டுகள் வரை. இவர் இலங்கை, மற்றும் இப்போதுள்ள ஒடிசா மாநிலம் ஆகியவற்றை வென்று ஆட்சி நடத்தினார். இவர் தமிழகத்தில் தஞ்சாவூரில் உள்ள பெரிய கோவிலை கட்டினார். இது கடந்த 2010 ஆண்டு 1000 ஆண்டு விழாவை கொண்டாடியது. இதை கட்ட 25 ஆண்டுகள் ஆகின என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். இந்த கோவிலை உருவாக்கிய அனைவரின் பெயர்களும் பொறிக்கப்பட்டுள்ளன. இது தமிழர்களின் பெருமை சொல்லும் ஒரு சின்னமாக விளங்குகிறது.

Kailash
2B Class
கைலாஷ்
2B வகுப்பு



## திருக்குறள்

திருக்குறள் தமிழின் மிக பழமையான நூல்
திருக்குறள் திருவள்ளுவரால் எழுதப்பட்டது
இந்நூலில் 133 அதிகாரங்கள் உள்ளது
ஒவ்வொரு அதிகாரமும் 10 பாடல்கள் கொண்டது
மொத்தம் 1330 பாடல்கள் கொண்டது
ஒவ்வொரு பாடலும் "ட்விட்டர்" மாதிரி மிகசுருக்கமானது
இந்நூலுக்கு கலைஞர், பரிமேலழகர், சாலமன் பாப்பையா போன்ற அறிஞர்கள் உரை எழுதியுள்ளனர்
இந்நூல் உலகப் பெற்றது

## வகுப்பு - 2ஆ


### ஆசிரியர்

### திரு. சித்தீக்



## வகுப்பு - 2ஆ ஆசிரியை திருமதி. சுகந்தினி



ஆனந் அழகானந்தம்
Anas Azhakanantham
சுகந்தினி சந்திரசேகரன்
2 ஆ 2B

நன்றி

நான் தமிழ்நாட்டிற்கு இளம் வயதில் சென்றபோது எனக்கு தமிழ் சரியாக பேச தெரியாது. எழுத படிக்கவும் தெரியாது. என் உறவினர்களிடம் சரியாக பேச தெரியாமல் இருந்தேன். நான் தமிழ் பள்ளியில் சேர்ந்த பிறகு சென்ற வருடம் இந்தியா சென்றபோது, நான் தமிழில் பேசவும் மற்றவர்கள் பேசுவதை புரிந்து கொள்ளவும் முடிந்தது மற்றும் எழுத படிக்கவும் முடிந்தது. எனக்கு தமிழ் கற்று கொடுத்த தேரி தமிழ்ப்பள்ளிக்கும் எனது ஆசிரியர்களுக்கும், எனது நன்றி, வணக்கம்.

# வகுப்பு - 2ஆ ஆசிரியை திருமதி. சுகந்தினி

## திருவள்ளுவர்

அனன்யா
வகுப்பு 2
Ananya B

உலகம் போற்றும் உலகப்பொது மறையான திருக்குறளை எழுதியவர் திருவள்ளுவர்.

இவர் தமிழ் நாட்டில் உள்ள கன்னியாகுமாரி மாவட்டத்தில் பிறந்தார்.

இவர் பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தார் என நம்பப் படுகிறது.

இவருக்கு செந்நாபோதார், தெய்வப்புலவர், பொய்யா மொழியார், ஞான வெட்டியன் என வேறுப் பெயர்களும் உண்டு.

சமீபத்திய ஆராய்ச்சியில் கன்னியாகுமாரி மாவட்டத்தில் உள்ள வள்ளுவ நாட்டை இவர் ஆண்டதாகக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

## பாரதியார்

Charanya Srinivasan
சரண்யா ஸ்ரீனிவாசன்
2ஆ - 2B

பாரதியார் ஒரு முக்கியமான மனிதர். இவர் தமிழ் நாட்டின் தமிழ் தாத்தா என்று அழைக்கப் படுகிறார். அவர் எழுதிய "நின்னை சரணடைந்தேன்" பாட்டை எனக்கு ரொம்ப பிடிக்கும். பாரதியார் நிறைய பாடல்கள் எழுதினார். பாரதியார் எழுதிய கவிதைகள் இன்றும் எல்லோரும் பாடுகிறார்கள்.

## மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

ஷாலினி
சுப்பிரமணியன்
2ஆ

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் டிசம்பர் 11 தேதி 1882 ஆம் வருடம் தமிழ்நாட்டில் உள்ள எட்டையபுரத்தில் பிறந்தார். அவரது கவிதை திறமையால், பதினொராவது வயதில் "பாரதி" என்று அழைக்கப்பட்டார். அவர் பள்ளி ஆசிரியராகவும் பத்திரிகை ஆசிரியராகவும் பணியாற்றினார். பாரத தமிழ் மொழி மட்டுமல்லாமல், ஆங்கிலம், இந்தி, சமஸ்கிருதம் அரபிக்கிலும் போன்ற மற்ற மொழிகளிலும் புலமை பெற்றிருந்தார். இருப்பினும் தமிழ் மொழியின் மீதும் இந்திய நாட்டின் மீதும், தீராத பற்று கொண்டவர்.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்"

"தேமதுரத் தமிழ்நாடெனும் போதினிலே
இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே!"

போன்ற பல பாடல்களையும் கவிதைகளையும் எழுதி உள்ளார்.

பெண் விடுதலைக்காகவும், இந்தியாவின் சுதந்திரத்திற்காகவும், ஜாதி மதங்களை ஒழிக்கவும் அவர் போராடினார். பாரதி செப்டம்பர் மாதம் 11 ஆம் தேதி 1921 ஆம் உடல் நலக் குறைவினால் இயற்கை எய்தினார்.

வாழ்க தமிழ்! வாழ்க பாரதியின் புகழ்!

## திருவள்ளுவர்

ஸ்ரீநிதி
பழனிவேலன்
2B

திருவள்ளுவர் பழந்தமிழ் இலக்கியமான திருக்குறளை இயற்றிய புலவர். திருவள்ளுவர் மயிலாப்பூரில் வாழ்ந்து வந்தார். அவரது மனைவி பெயர் வாசுகி. நாயனார், தெய்வப்புலவர் பெருநாவலர் என்பவை இவரது சிறப்புப் பெயர்கள்

திருக்குறள் எழுதி உலக இலக்கிய அரங்கில் தமிழர்கள் பெருமிதமாக நிற்கும்படி செய்தவர் திருவள்ளுவர். இவர் இயற்றிய வேறு நூல்கள் — பஞ்சரத்னம், ஞான வெட்டியான். தமிழ்நாட்டு அரசு 133 அடி உயரமுள்ள திருவள்ளுவர் சிலை ஒன்று அவரின் நினைவாக நிறுவியுள்ளது.

திருவள்ளுவரை போற்றும் வகையில் "திருவள்ளுவர் தினம்" கொண்டாடப் படுகிறது.

# வகுப்பு - 3அ ஆசிரியர் திரு. குரு

அட்சயன் சந்திரசேகரன்
Adchayan Santhirasegaran
வகுப்பு: 3அ
ஆசிரியர்: திரு குருபரன்

## திருக்குறள்

திருக்குறள் உலகப் புகழ் பெற்ற தமிழ் இலக்கியம் ஆகும். இதிலுள்ள கருத்துக்கள் இன, மத, மொழி வேறுபாடு இல்லாமல் எக்காலத்துக்கும் பொருத்தமாக உள்ளன. இதனால் திருக்குறள் "உலகப் பொதுமறை" என்றும் அழைக்கப்படுகின்றது.

திருக்குறள் அறம், பொருள், இன்பம் எனும் முப் பெரும் பிரிவுகளைக் கொண்டது. இதில் ஆயிரத்து முந்நூற்று முப்பது (1330) குறட்பாக்கள் உள்ளன. இவை பத்துக் குறட்பாக்களைக் கொண்ட நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளன. ஒவ்வொரு குறட்பாவும் இரண்டு அடிகளில் வாழ்க்கைக்குத் தேவையான நல்ல கருத்துக்களை அழகாகச் சொல்கின்றது. இதையே "அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி குறுகத் தறித்த குறள்" என்றார் ஔவையார்.

மன ஊக்கம் பற்றிய ஒரு குறட்பா இதுவாகும்:

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு — குறள் 595

நீர்ப் பூக்களின் தண்டின் நீளம் நீரின் அளவே இருப்பது போல மக்களின் உயர்வும் அவர்களின் மன ஊக்கத்தின் அளவே இருக்கும்

சௌரவன்
செல்வியர்

## தமிழ் மொழி

தமிழ் மொழி மிகவும் பழமையான மொழி. உலகில் உள்ள மிகப் பழமையான மொழிகளில் தமிழும் ஒன்று. தமிழ் மொழி உலகின் பல்வேறு நாடுகளில் வாழும் தமிழ் மக்களால் பேசப்படுகிறது. முன்பு தமிழ்நாடு மற்றும் தமிழீழம் என்று எமது மொழி. இலங்கையிலிருந்து சிங்கப்பூர், மலேசியா, தென்னாபிரிக்கா என்று வளர்ந்தது. சோழர் காலத்தில் தமிழ்மொழியின் பெருமை யாவை, கைத்திறா யாப்பான் இந்தோனேசியா எனப் பரந்திருந்தது. இன்று உலகெங்கிலும் வாழும் தமிழர்களாகிய நாமும் எம் தமிழ் மொழியைப் பேணிப் பாதுகாக்க வேண்டும்.

ரக்சி கணேசன்
3A
திரு குருபரன்

## மாமல்லபுரம்

பல்லவர் காலத்தில் மாமல்லபுரம் ஒரு துறைமுகமாக இருந்தது. மாமல்லபுரம் நரசிம்ம பல்லவ ராசனால் உருவாக்கப்பட்டது. இங்கு கற்பாறைகளில் சிற்பங்கள் செதுக்கப்பட்டன. கடற்கரை கோயில், ஐந்து ரதம், அர்ச்சுனா தவம் இவை மூன்றும் ஆயிரத்து முன்னூறு வருடங்களுக்கு முன்னால் வடிவமைக்கப்பட்டன. இவை அனைத்தும் UNESCO மற்றும் உலக பாரம்பரிய தளங்களில் ஒன்றாக நியமிக்கப்பட்டுள்ளது. ரதங்களைப் போல ஒரே கல்லால் செதுக்கப்பட்டுள்ள கோயில்கள் ஒவ்வொன்றும் பஞ்ச பாண்டவர்கள் பெயர் சூட்டி அழைக்கப்படுகின்றன. என் தாத்தாவின் பூர்வீகம் மாமல்லபுரம்.



## திருக்குறள்

பெயர்: சித்து சண்முகம்
ஆசிரியர்: திரு குருபரன்
வகுப்பு: 3அ

திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். திருக்குறள் உலகப் பொது மறை நூல் என்று சொல்லப்படுகிறது. இந்நூல் தமிழின் சிறந்த வழிகாட்டி. தமிழ்ப் [illegible].

திருக்குறள் 1330 குறட் பாக்களைக் கொண்டது. அவை 133 அதிகாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. திருக்குறள் [illegible] 34 மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டி குறுகத் தறித்த குறள் என்று ஔவையார் திருக்குறளை பாராட்டியுள்ளார்.


திருவள்ளுவர் முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்தார். [illegible] அரசருக்கு நல்ல ஆலோசனை கூறும் அமைச்சராக இருந்தார். [illegible] அவர் [illegible] வாசுகியுடன் இல்லறத்தை [illegible], பாட்டியுடன், [illegible] தொண்டுகளை [illegible].

[illegible] உலகப் பொதுமறை [illegible] திருக்குறள் [illegible].

## கல்லணை

சு.ஜெய சுதர்சன்
ஆசிரியர்: திரு.குபேரன்

கல்லணை காவிரி ஆற்றில் கட்டப்பட்டுள்ளது. இந்த அணை இரண்டாம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இந்த அணை திருச்சிக்கு மிக அருகில் உள்ளது. கல்லணை மிக பழமையான அணை. இந்த அணையின் நீளம் 1080 அடி அகலம் 66 அடி உயரம் 18 அடி. இது கிராண்ட் அணைகட் (Grand Anicut) என்று அழைக்கப் படும். பாறைகளும், களி மண்ணையும் கொண்டு கட்டிய அணைதான் கல்லணை. இந்த அணை கரிகால சோழ மன்னனால் கட்டப்பட்டது. இந்த அணை நீர்பாசன வசதிக்காக கட்டப்பட்டது.



வகுப்பு - 3அ

ஆசிரியர்

திரு. குரு

வகுப்பு - 3அ ஆசிரியர் திரு. மணிவண்ணன்

## மறுசுழற்சி

தரணி செந்தில்குமார்
3அ கேரி நூல் பள்ளி 2013-2014
ஆசிரியர்: மணிவண்ணன்



இந்தசின்னத்தை பார்த்திருக்கிறீர்களா? இது மறுசுழற்சி சின்னம். இது என்ன சொல்கிறது தெரியுமா?

1. பொருட்களை அளவாக பயன் படுத்து.
2. பழைய பொருள் களால் புதிய பொருட்கள் செய்.
3. பழைய பொருட்களால் செய்த புதிய பொருட்கள் வாங்கு.

மறுசுழற்சி ஏன்?

பூமியின் சுற்றுச்சூழல் பாதிக்கப்படாது. பூமியின் இயற்கை வளங்களை அடுத்த சந்ததிக்கு சேமிக்கலாம்.

## மதுரை மீனாட்சி அம்மன் கோவில்

பெயர்: [illegible]
ஆசிரியர்: மணிவண்ணன்
[illegible]
[illegible]

மதுரை மீனாட்சி அம்மன் கோவில் மொத்தமாக நாற்பத்தி [illegible] பெண் கடவுள் பார்வதிக்கும், அவர் கணவர் சிவனுக்கும் கட்டப்பட்டுள்ளது. முப்பத்தி மூன்றாயிரம் [illegible] பயணிகள் வருவார்கள். மீனாட்சி திருக்கல்யாண திருவிழாவுக்கு பத்து இலட்சம் பயணிகள் வருவார்கள். அரசர் [illegible] மீனாட்சி அம்மன் கோவிலை கட்டினார். இந்த கோவிலுக்கு நான்கு திசையில் நான்கு நுழைவாயில்கள் இருக்கிறது. இந்த கோவிலுக்கு ஐம்பது பூசாரி எப்போதும் பூஜைகள் செய்வார்கள். உள்ளே ஒரு சிலையில் கடவுள் சிவன் நடராஜராக இருப்பார். மற்றொரு சிலையில் தெய்வம் பார்வதி ஒரு கிளியை பிடித்துக்கொண்டிருப்பார். மீனாட்சி அம்மன் கோவில் தண்ணீர் எல்லாம் பொற்றாமரை குளத்திற்கு போகும். இந்த கோவில் முழுவதும் திராவிடியன் கட்டடத்தில் இருக்கும். நீங்களும் மதுரைக்கு எப்பொழுதாவது போனால் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலை பார்த்து மகிழுங்கள்.





புலி இந்தியாவின் தேசிய விலங்கு. புலியை காடுகளின் கடவுள் எனவும் அழைப்பார்கள். இந்தியாவின் தேசிய விலங்கு என்ற பெயருக்கு ஏற்ப கருணை, வலிமை, சுறுசுறுப்பு, அதீத பலம் போன்ற சிறந்த குணங்களை கொண்டுள்ளது. புலிகளின் சிறந்த குணங்களான வலிமை, தற்பாதுகாப்பு போன்றவை இந்தியர்களின் சிறந்த குணங்களாக பிரதிபலிக்கப்படுகிறது. எட்டு வகையான புலி இனங்களில், இந்திய இனம் மற்றும் உட்கொண்ட இக புலி வகைகள் இந்தியா முழுவதும் உள்ளது.

ஜோ டேனிகா இனிகோ
திரு. மணிவண்ணன் - 3A

Joe Danica Inigo
Mr. Manivannan - 3A

கல்லணை

அஜய் கனிஷ்குமார் மணிவண்ணன் 3A



கல்லணை உலகின் கட்டப்பட்ட பழமையான அணை. இது காவேரி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. இது தஞ்சாவூர் தமிழ் நாட்டில் உள்ளது. கல்லணை கரிகால சோழனால் கட்டப்பட்டது. இது திருச்சியில் இருந்து 15 கி.மீ. தொலைவில் உள்ளது. கல்லணையின் நீளம் 1079 அடி. இது கண்ணாம்பு கற்கள் மற்றும் சேறு கொண்டு கட்டப்பட்டது. கல்லணை தமிழ் நாட்டின் கட்டடக்கலைக்கு ஒரு உதாரணமாக உள்ளது.

# வகுப்பு - 3அ ஆசிரியர் திரு. ஷபி

காவ்யா குமார்
Kavya Kumar
ஆசிரியர் - ஷபி
வகுப்பு - 3அ

தாமரை

தாமரை இந்தியாவின் தேசிய மலர். இந்த பூ அழகையும் நிறைவையும் குறிக்கும் சின்னம். பிரம்மா, லக்ஷ்மி, சரஸ்வதி உள்ளிட்ட இந்து மதத்தின் பல கடவுளர்கள் தாமரையின் மேல் அமர்ந்திருப்பதாக சித்தரிக்கப்படுகிறார்கள். தாமரை நன்னீரில் வளரும் மலர். தாமரைச் செடியின் இலையும் மலரும் நீரில் மிதக்கும். இந்த பூ மலரும் போது, இதழ்கள் அழகாக விரியும். தாமரையை வெள்ளை, சிவப்பு, இளஞ்சிவப்பு, நீலம், ஊதா போன்ற பல நிறங்களில் பார்க்கலாம். நான் பார்த்த அத்தனை மலர்களிலும் தாமரைதான் எனக்குப் பிடித்த மலர்




கல்லணை


சின்னா பாஸ்கரன்
வகுப்பு 3அ


கல்லணை கரிகால சோழன் இரண்டாம் நூற்றாண்டில் கட்டினான். இது மிகவும் வரலாற்று சிறப்பு மிக்கது. தமிழ் நாட்டின் திருச்சி பக்கத்தில் காவேரி ஆற்றின் மேல் கட்டப்பட்டுள்ளது. காவேரி செல்லும் இடங்களில் நீர் பாசன வசதி செய்வதற்காக இது கட்டப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கிலேயர்களால் புதுப்பிக்கப்பட்டது. கல்லணை இடமான கற்களைக் கொண்டு, 1079 அடி நீளத்திலும், 66 அடி அகலமும், 18 அடி உயரமும் கொண்டு கட்டப்பட்டுள்ளது. காவேரி ஆறு நான்கு ஆறுகளாகப் பிரிகிறது. அவை கொள்ளிடம் ஆறு, காவேரி ஆறு, வெண்ணாறு, புதுஆறு. கல்லணை உழவர்களுக்கு மிகவும் நன்மை பயக்கிறது. இது பழந்தமிழர்களின் பொறியியல் திறமைக்கு உதாரணமாக உள்ளது.




## வகுப்பு - 3ஆ ஆசிரியர் திரு. இராஜசேகர்





# வகுப்பு - 3ஆ

## ராம நவமி



ஹாசினி வேலுமணி
வகுப்பு 3-B
ஆசிரியர்: ஆர்கட ராஜசேகர்

ராம நவமி கொண்டாடப்படும் ஸ்ரீராமர் அரசன் தசரதருக்கும் கோசலை கௌசல்யாவுக்கும் பிறந்த நாள் ஆகும். இது ராமர் சீதாதேவியை திருமணம் செய்த நாளும் ஆகும். இது ஒரு ஒன்பது நாள் கொண்டாட்டம் ஆகும். சைத்திர மாதத்தில் ஒன்பதாம் நாளில் துவங்கும். அந்த நாள் "பத்ர சாவம்" அல்லது "விரதம்" என்று கூறப்படும். இந்த நாளில் சிலர் உண்ணாவிரதம் ஆரம்பிப்பார்கள். இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு இடங்களில் மற்றும் வழிகளில் இந்த பண்டிகையை கொண்டாடுவார்கள். உதாரணமாக, தமிழர்கள் ராமேஸ்வரத்தில் ராமர் சீதாதேவிக்கு கல்யாண உற்சவம் நடத்துவார்கள். ஆந்திர மக்கள் சீதைக்கு கோவிலில் பூஜை செய்வார்கள். மற்ற நாட்களில், நிறைய கோவில்களில் ராமாயண கதைகளை படிப்பார்கள், பக்தர்களுக்கும் மக்களுக்கும் பிரசாதம் கொடுப்பார்கள், மற்றும் பகவான் பற்றி வேத பாடல்களை பாடுவார்கள்.

ஸ்ரீ ராமர் விஷ்ணுவின் ஏழாம் அவதாரம் ஆகும். அவர் சகோதரர்களுடன் சமநிலைக்கு கொண்டுவரவும், ராவணனை அழிக்கவும் அவதரித்தார். ராஜா தசரதன் மூன்று மனைவிகள் கொண்டு பிள்ளை செல்வம் பெறுவதற்கு ஒரு யாகம் நடத்தினார்கள். சொர்க்கத்திலிருந்து ஒரு பாயாசம் இறங்கியது. அதை மூன்று பேரும் சாப்பிட்டார்கள். கோசலை கௌசல்யாவுக்கு இராமர் பிறந்தார். அவருடைய பாம்பு படுக்கை, லக்ஷ்மணனாக அவதரித்தார். கொண்டாட்டத்தின் கடைசி நாளில் லக்ஷ்மணன், அனுமன் கொண்டு ராமர் மற்றும் சீதையுடன் சிலைகள் ஊர் வீதிகளில் கொண்டுவரப்படுகின்றன. பக்தர்கள் ராமராஜ்யத்தின் கதைகளும் புகழையும் பற்றி பாடுவார்கள். திரேதா யுகத்திலிருந்து அரசன் ராமர் தான் பூமியிலிருந்து மிகச் சிறந்த அரசர் ஆவார் என்றும் பாடுவார்கள். ராம நவமி இந்துக்களுக்கு ஒரு புனிதமான விழா ஆகும். ஹரே கிருஷ்ணா ஹரே ராமா என்றே கூறி வாழ்வோம்!

சைத்திர மாதம்:
March/April

பெயர்- மீரா
ஆசிரியர்- Rajasekar
வகுப்பு 3B
Name- Mira
Teacher- இராஜசேகர்
Class- 3B

## தீபாவளி பண்டிகை



இந்து மதத்து பண்டிகைகளில் தீபாவளியும் ஒன்று. ஒவ்வொரு வருடமும் ஐப்பசி மாதத்தில் தீபாவளி பண்டிகையை கொண்டாடுவோம். தீபாவளி அன்று அதிகாலையில் எழுந்து புத்தாடை அணிந்து கொள்வோம். தொலைபேசியின் மூலம் நண்பர்கள், பாட்டி மற்றும் உறவினர்களுக்கு வாழ்த்துக்கள் தெரிவித்து மகிழ்வோம். வீட்டில் செய்யும் பலகாரங்களை நண்பர்களுடன் பகிர்ந்து கொள்வோம். பின்பு மாலையில் குடும்பத்துடன் மத்தாப்புகள் கொளுத்தி கொண்டாடுவோம்.



வகுப்பு 3B
இராஜசேகர்

ராஜ் கண்ணன்

## கார்த்திகை தீபம்

கார்த்திகை தீபம் ஒவ்வொரு வருடமும் கார்த்திகை மாதம் பௌர்ணமி அன்று கொண்டாடப்படும் பண்டிகை. கார்த்திகை தீபம் அன்று பெண்கள் வீட்டின் வாசலில் அழகான கோலமிட்டு விளக்குகளை ஏற்றி மகிழ்வார்கள். தீபம் அன்று கோவிலிலும் வீட்டின் வாசலிலும் அகல் விளக்கில் எண்ணெய் ஊற்றி ஏற்றுவார்கள். இதை பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கும். பஞ்சபூத தலங்களில் அக்னி தலம் திருவண்ணாமலை. இந்த மலையின் உச்சியில் தீபம் ஏற்றப்படும், அதற்கு மகா தீபம் என்று பெயர். கார்த்திகை தீபம் மூன்று நாட்கள் கொண்டாடப்படும். முதல் நாள் பரணி தீபம் மறுநாள் கார்த்திகை தீபம் மூன்றாம் நாள் விஷ்ணு தீபம் என்றும் பெயர். தீபத்தின் அன்று ஏராளமான மக்கள் மலையை சுற்றி கிரிவலம் வருவார்கள். திருவண்ணாமலையில் கோடி ஜோதியாக தீப திருவிழா கொண்டாடப்படும்.



**ஆசிரியர்**

**திரு. இராஜசேகர்**

# வகுப்பு - 3ஆ ஆசிரியை திருமதி. ரம்யா

## வைகுண்ட ஏகாதசி

ஐஸ்வர்யா பாலாஜி
3ஆ ஆசிரியர்: ரம்யா
வரதராஜன்

வைகுண்ட ஏகாதசி அன்று உபவாசம் இருப்பார்கள். இந்த நாள் பெருமாளை வணங்க உகந்த நாள். அந்த நாளில் உபவாசம் இருந்தால் அது எல்லா ஏகாதசி அன்றும் உபவாசம் இருப்பதற்குச் சமம். இந்த பண்டிகை மார்கழி மாதத்தில் வரும். இந்த நாளில் மக்கள் துளசியை கொண்டு பெருமாளை பூஜை செய்வார்கள். கோவிலுக்கும் மக்கள் செல்வார்கள்.



பெயர்: அனுஸ்ரீ ஜெயக்குமார்
ஆசிரியர்: ரம்யா
Name: Anushree Jeyakumar
Teacher: Ramya

## ஆண்டாள்

ஆண்டாள் இந்தியாவின் தெற்கு பகுதியில் 10-ம் நூற்றாண்டில் வாழ்ந்து வந்த ஒரு தமிழ்க் கவிஞர். அவர் பாடிய ஆண்டாள் திருப்பாவை இன்றும் மார்கழி மாதத்தில் பக்தர்களால் கோவில்களில் பாடப்பட்டு வருகிறது. விஷ்ணு சித்தர் ஸ்ரீவில்லிபுத்தூர் கோவில் தோட்டத்தில் ஒரு துளசி செடியின் கீழ் பெண் குழந்தை ஒன்றை கண்டெடுத்தார். அவர் அந்த குழந்தைக்கு கோதா தேவி என்று பெயரிட்டார். இறைவன் ரங்கநாதர் மீது மிகுந்த பக்தியுடன் வளர்க்கப்பட்டார். தினமும் அவரது கையால் மாலை தயாரித்து இறைவனுக்கு அணிவிப்பார். ரங்கநாதர் மீது கொண்ட பக்தியால் அவரையே திருமணம் செய்து கொண்டார்.

பெயர்: அர்ச்சனா
வகுப்பு: 3ஆ
ஆசிரியர்: ரம்யா வரதராஜ்

## பொங்கல்

பொங்கல் திருநாள் தமிழர்களின் முக்கிய திருவிழா ஆகும். பொங்கல் திருவிழா ஒரு நன்றி தெரிவிக்கும் திருநாள் ஆகும்.

வாசலில் கோலம் செய்து தோரணம் கட்டி, அடுப்பு வைத்து, அலங்கரித்த பானையில் [illegible] அடுப்பில் வைப்போம். பானையில் பால் பொங்கி வரும் போது "பொங்கலோ பொங்கல்" என்று கூறுவோம். [illegible] சூரியனுக்கு படைப்போம். பின்னர் பொங்கலையும் பல காய்கறிகளையும் நண்பர்களுக்கு கொடுத்து [illegible] மிகவும் பிடித்த திருநாள் ஆகும்.





பெயர்: அஸ்வின் வீரராகவ் [illegible]
வகுப்பு: 3ஆ
ஆசிரியர்: ரம்யா

## நவராத்திரி

நவராத்திரி என்பது இந்துக்களின் பண்டிகையாகும். இது சக்தி தேவியின் ஒன்பது வடிவங்களை வழிபடுவதாகும். இது ஒன்பது நாட்கள் நடைபெறும். இது [illegible] என்றும் அழைக்கப்படும். துர்கை, பத்ரகாளி, அன்னபூரணி தேவி, சர்வமங்களா, லலிதா, பவானி மற்றும் மூகாம்பிகை என்பன சக்தி தேவியின் ஒன்பது வடிவங்கள் ஆகும். [illegible] நவராத்திரியின் போது [illegible] உணவாகும். சில இடங்களில் கொலு வைப்பார்கள். தீபாவளி பண்டிகை நவராத்திரி முடிந்து இருபது நாட்கள் கழித்து கொண்டாடப்படும். நவராத்திரி என்பது மகிழ்ச்சியான பண்டிகையாகும். நீங்கள் அனைவரும் இதைக் கொண்டாட வேண்டும்!






## வகுப்பு - 3ஆ


## ஆசிரியை

## திருமதி. ரம்யா

## வகுப்பு - 4 அ ஆசிரியர் திரு. பாரதி













## வகுப்பு - 4 ஆ ஆசிரியர் திரு. எழில்வேந்தன்




# வகுப்பு - 4 ஆ   ஆசிரியர் திரு. எழில்வேந்தன்

## இத்தாலி

இத்தாலி ஒரு பழமையும் பெருமையும் வாய்ந்த சிறப்பு மிக்க நாடாகும். ஐரோப்பாவின் தென் பகுதியில் அமைந்த நாடாகும். இந்த நாடு பல அதிசயங்கள் உள்ளடக்கியது. [illegible]




ஆர்த்தி [illegible]
4B
ஆசிரியர் - ந. எழில்வேந்தன்

## கெனடா

ஜூலியான்
4ஆ
ஆசிரியர் - ந. எழில்வேந்தன்

எனக்கு கெனடா நாட்டுக்கு போக ஆசை. ஏனென்றால் என் அப்பா மற்றும் பாட்டி, அத்தை அனைவரும் அங்கு வசித்து வந்தார்கள். என் பாட்டி அங்கு ஒரு வீடு வைத்திருந்தார். என் அத்தையும் என் அப்பாவும் கனடா நாட்டில் உயர் படிப்பை முடித்தார்கள்.

அங்கு எனக்கு நயகரா நீர்வீழ்ச்சியை பார்க்க ஆசை. சி என் டவர் பார்க்கவும் ஆசை. அங்கு பனி அதிகமாக இருப்பதால் பனி சறுக்கு விளையாட்டு அதிகமாக இருக்கும். எனக்கு ~~விளை~~ பனி விளையாட்டு மிகவும் பிடிக்கும் அதனால் எனக்கு கனடா நாட்டை சுற்றி பார்க்க ஆசை.



## ஸ்பெய்ன்

பெயர்: [illegible]
வகுப்பு: 4B
ஆசிரியர்: எழில் வேந்தன்

நான் ஸ்பெய்ன் நாட்டை சுற்றுலா செல்ல விரும்புகிறேன். எனக்கு அங்கே பல காரணங்களுக்காக செல்லவேண்டும். அங்கே எனக்கு மிக பிடித்த காற்பந்து அணி FC பார்சிலோனா ஸ்பெய்னில் விளையாடுவார்கள். எனக்கு ஸ்பெய்னை சாப்பாடு பிடிக்கும். அதிலும் டாகோஸ், சுரோஸ், போன்ற பதார்த்தங்கள் சாப்பிட பிடிக்கும். பிறகு அங்கே ஒரு மிக புகழ்பெற்ற திருவிழா இருக்கும். அந்த திருவிழாவோட பெயர் தக்காளி திருவிழா. அங்கே ஐம்பது ஆயிரம் மக்கள் சேர்ந்து ஒரு பெரிய தக்காளி சண்டை இருக்கும்.

சியேர்படா என்று ஒரு நாங்கள். அப்போது பிறபகுதியில் ஆய்வு செய்வார்கள் ஸ்பெய்னின் தண்ணீர் ஆழ்ப்பகுதிகளை நிறைய மீன்கள் இருக்கும். அங்கே நிறைய கடற்கரைகள் இருக்கும். தோராயமாக ஐந்து கிலோமீட்டர்கள் கடலோரம் இருக்கும். ஸ்பெய்ன் ஒரு அற்புதமான நாடு

## பெல்ஜியம்

Sarah Savariyar
சாரா சவேரியார் - 4ஆ
Ezhil - எழில்வேந்தன்

பெல்ஜியம் பல இன மக்கள் வாழும் ஒரு அழகான நாடு. இதன் பரப்பளவு அமெரிக்காவின் மேரிலாந்து அளவு இருந்தாலும், இது பல அதிசயங்களை கொண்டுள்ளது. பெல்ஜியத்தில் மக்கள் தொகை 10,449,361. இதில் 75% பேர் கிறிஸ்துவர்கள். இங்குள்ள மக்கள் டட்ச், ஜெர்மன், ப்ரெஞ்சு ஆகிய மொழிகளை பேசுகிறார்கள்.

பெல்ஜியத்தில் இனிப்பு மிட்டாய்கள் உலக புகழ் பெற்றவை. அமெரிக்கர்கள் விரும்பி சாப்பிடும் உருளைக் கிழங்கு குச்சி பொரியல் (French fries) பெல்ஜியத்திலிருந்து வந்தது என்றால் உங்களால் நம்ப முடிகிறதா?

பெல்ஜிய நாட்டிலிருந்து நிறைய உபயோகமான பொருள்களை ஏற்றுமதி செய்கிறார்கள். பெல்ஜியத்திலிருந்து நிறைய வைரக் கற்களை ஏற்றுமதி செய்கிறார்கள்.

எனக்கு பெல்ஜியம் போக மிகவும் பிடிக்கும் ஏன் என்றால் அங்கே சுவையான சாப்பாடுகள் இருக்கும். மற்றும் அவர்களோட மொழி கேட்க இனிமையாக இருக்கும். என்னுடைய பெரியப்பாகூட அங்கே தத்துவம் படித்து டாக்டர் பட்டம் பெற்றார். பெல்ஜியம் நாடு ஒரு சிறந்த நாடு.



# வகுப்பு - 4 ஆ

## எகிப்து

அஷ்மினா சொர்ண




எகிப்து ஆப்பிரிக்கா மற்றும் ஆசியாவில் உள்ள ஒரு நாடு. அங்கே பார்க்க நிறைய அழகான இடங்கள் இருக்கிறது. 'Giza Necropolis' என்ற ஆறு பிரமிடுகள் உலக அதிசயத்தில் ஒன்றாகும். அங்கே உள்ள பிரமிடுகள் 140 அடி உயரம் இருக்கும். அது 'கூபு' என்ற ஒரு ராஜாவுக்காக கட்டப்பட்டது. எகிப்தில் பல அழகிய கடற்கரைகள் உள்ளன. இப்போது, எகிப்து மக்கள் அரபு மொழி பேசுவார்கள். முன்பு அங்கு உள்ள மக்கள் எகிப்தியன் மொழியில் பேசி 'hieroglyphics' பயன்படுத்தினார்கள். அங்கே நிறைய பேர் நைல் நதி பக்கத்தில் வாழ்கிறார்கள். உலகத்தில் மிக நீளமான நதி என்றால் அது நைல் நதி!

## பிரேசில்

அருண் செந்தில்குமார்
புது சேரி தமிழ் பள்ளி
ஆசிரியர்: கார்த்திகேயன்

எனக்கு ஒரு இடத்திற்கு செல்ல முடியும் என்றால், நான் பிரேசிலுக்கு போக வேண்டும். நான் பிரேசில் செல்ல வேண்டும். ஏனென்றால் அங்கு எனக்கு பிடித்த பல வகையான உணவுகள் மற்றும் அழகாக கடற்கரைகள் இருக்கும். அங்கு நான் பிரேசில் கால்பந்து மைதானத்தில் பார்க்க வேண்டும். அங்கு நான் ரியோ டி ஜெனிரோ பார்க்க வேண்டும். ரியோ டி ஜெனிரோவின் உள்ள பிரபலமான மலைகள், அடையாளங்கள், கடற்கரைகள் மற்றும் கார்னிவல் திருவிழா இருக்கும். பிரேசில் அதன் உணவு பிரபலமானது. பிரேசில் நாட்டின் தேசிய உணவு பேஜோடா (feijoada) என்று அழைக்கப்படுகிறது. பிரேசில் பிரபலமான கால்பந்து வீரர்களை. நான் அவர்களின் கலாச்சாரம் மற்றும் அவர்களின் பாடல்களை விரும்புகிறேன். ஒரு நாள் நான் அங்கு வாழ விரும்புகிறேன்.



## நான் செல்ல விரும்பும் நாடு

பெயர்: ரித்விக் சுந்தரராஜன்
வகுப்பு: 4ஆ
ஆசிரியர்: கார்த்திகேயன்

கோடை விடுமுறையில் நான் சுற்றுலாவிற்கு செல்ல விரும்பும் நாடு பிரிட்டன் என்ற இங்கிலாந்தின் தலைநகர் லண்டன் ஆகும். இங்கிலாந்து தண்ணீரால் சூழப்பட்ட தீவு நாடு. நான் இங்கு செல்ல விரும்புவதற்கு காரணம், இது சரித்திர பழமை வாய்ந்த இடங்களை கொண்டுள்ளது.

இங்கிலாந்தின் தலைநகர் லண்டன் பல நாட்டுப் பயணிகளை கவர்ந்து இழுக்கும் இடமாக உள்ளது. பக்கிங்காம் அரண்மனை, ஸ்டோன்ஹென்ஜ், விண்ட்சர் கோட்டை என குறிப்பாக சில இடங்களை சொல்லலாம். இதைத் தவிர டௌனிங் சாலையில் இங்கிலாந்து நாட்டின் பிரதம மந்திரியின் இல்லம் உள்ளது. எனக்கு பிக்பென் என்ற உலகப் புகழ் பெற்ற இங்கிலாந்தின் பழமை வாய்ந்த கடிகாரம் உள்ள பாராளுமன்றத்தை பார்க்க ஆசை. இந்த நகரில் நிறைய அருங்காட்சியகங்கள் உள்ளன.

இவ்வாறு லண்டன் மாநகரில் பார்க்க வேண்டிய இடங்களை பற்றி சொல்லிக் கொண்டே போகலாம். உங்களுக்கும் என்னுடன் லண்டன் செல்ல ஆசையாக உள்ளதா? வாருங்கள் செல்லலாம்!



## ஆசிரியர்

## திரு. சக்திவேல்

# வகுப்பு - 4 ஆ ஆசிரியை திருமதி. சிவகாமி

## இட்டலி

ரு: அஜய் முத்தங்கொர்

எனக்கு இட்டலி (Italy) போகவேண்டும் என்பது என்னுடைய நெடுநாள் ஆசை. முதலில் ரோம்மை (Rome) சுற்றி பார்க்க வேண்டும். அங்குள்ள கலைசிறந்த சிற்பங்களையும், ஓவியங்களையும் பார்க்கவேண்டும். Leaning Tower of Piza பார்க்கவேண்டும். பிறகு, இட்டாலியன் கால்ப்பந்து விளையாட்டை பார்க்க மிகவும் பிடிக்கும்.



பெயர் ஆதித்யா பாலாஜி
ஆசிரியர் திருமதி சிவகாமி
வகுப்பு 4ஆ

### எனக்கு பிடித்த நகரம்




நாம் ஏதாவது நாடு சுற்றிப் பார்க்க வேண்டும் என்றால், நாம் பிரான்சில் உள்ள பாரிசுக்குப் கண்டிப்பாக போக வேண்டும். அங்கு பார்ப்பதற்கு நிறைய இடங்கள் இருக்கின்றன. நான் சென்ற வருட கோடை விடுமுறைக்கு அங்கு சென்றேன். நான் அங்கே "ஐ:பல் டவர்" என்ற இடத்திற்கு சென்றேன். அதன் மேலிருந்து நான் பாரீஸ் நகரத்தைப் பார்த்தேன். அதன் பிறகு நான் அந்த நகரத்தில் இருக்கும் "லூவ்" என்ற ஒரு அருங்காட்சியகத்தை பார்க்கப் போனேன். அங்கே இருக்கும் ஓவியம், "மோனா லிசாவை," பார்த்தேன். பாரிசில் பல உணவகங்களில் நான் சாப்பிட்டேன். அதன் பிறகு நான் அங்கே இருக்கும் "நெபோலியந்" என்ற ஒரு தங்கும் விடுதியில் தங்கினேன். அடுத்த நாள் காலையில் விமான நிலையத்துக்கு சென்று நான் அமெரிக்காவுக்கு திரும்பினேன். எனக்கு பாரிஸ் மிகவும் பிடித்த நகரம்.

## Paris, France

காஞ்சனா சந்திரன்
4B

நான் உலகில் எங்கும் செல்ல முடியும் என்றால், நான் பாரிஸ்பிரான்ஸ் நகரத்திற்கு செல்வேன். அங்கே ஈபிள் கோபுரம் மற்றும் நல்ல இடங்களும் இருக்கும். அங்கே பல அருமையான உணவுகள் சாப்பிட்டு சந்தோஷமாக இருக்கலாம். நான் அவர்களின் கலாச்சாரத்தை மற்றும் அவர்கள் சரித்திரம் பற்றி படிக்க வேண்டும் என்று ஆசை. அது மட்டும் இல்லை, நான் ஈபிள் கோபுரம் மேல் ஏறி செல்லணும் என்று எனக்கு ஒரு ஆசை. அங்கே புது அனுபவங்கள் பெறலாம். அதனால் நான் பாரிஸ்பிரான்ஸ் நகரத்திற்கு செல்வேன்.



## மெக்ஸிக்கோ

நாங்கிஜோஸ்
ஆசிரியர்: சிவகாமி
4ஆ

ஆ நான் நான் மெக்ஸிகோவுக்கு செல்ல விரும்புகிறேன். எனக்கு அவர்களின் கலாச்சாரம் பிடிக்கும். மேலும், அவர்களின் உணவு சுவையாக இருக்கும். அவர்களின் உணவை காரமும், இனிப்பும் சேர்த்து செய்வார்கள், அதனால், எனக்கு அவர்களின் உணவை சாப்பிட பிடிக்கும். அவர்களின் ஆடைகள் வண்ணமயமாக இருக்கும். அவர்கள் "சொம்பரேரோ" என்று ஒரு தொப்பியை அணிவார்கள். இந்த தொப்பியை அணிந்தால் நிழல் கொடுக்கும். மெக்ஸிக்கோவில் நிறைய கலாச்சாரங்கள் இருக்கின்றன. அவற்றில் ஒன்று, "ஸ்பானிஷ்". இன்னொரு கலாச்சாரம், பழங்குடி மக்களுடையது. அவர்களின் மொழி கேட்பதற்கு இனிமையாக இருக்கும். ஸ்பானிஷ் தெரிந்து கொள்வது நல்லது. ஏனென்றால், இருபத்தி ஐந்து நாடுகளில் ஸ்பானிஷ் பேசுவார்கள். இதையெல்லாம் அனுபவிக்க நான் மெக்ஸிக்கோவுக்கு செல்ல விரும்புகிறேன்.




வருணியா கார்த்திகேயன்
வகுப்பு : 4இ
ஆசிரியர் : திருமதி. சிவகாமி

எனக்கு சிறுவயதிலிருந்தே எழுதுவதற்கு மிகவும் பிடிக்கும். இதற்கு காரணம் என் அம்மாவும் அப்பாவும் தான். பள்ளியில் நான் ஆங்கிலம் கற்றுக்கொண்டு கவிதை எழுதவும் பழகினேன். அப்போது தமிழிலும் ஏன் எழுதக்கூடாது என்று எனக்குத் தோன்றியது. நாங்கள் வண்டியில் செல்லும் போது எல்லாம் நிறைய தமிழ் பாட்டுகள் கேட்போம். அப்போது நிறைய சொற்கள் கற்றுக் கொண்டேன். எனக்கு ஆத்திச்சூடி எழுதிய ஔவையாரை மிகவும் பிடிக்கும். எனக்கும், நன்கு தமிழ் கற்றுக்கொண்டு எளிமையான தமிழ் கவிதைகள் எழுத மிகவும் விருப்பம்.

"இருக்கும் தோற்றத்தை வைத்து ஒருவரை மனிதனை கணிக்கக்கூடாது. குணத்தை வைத்தே மதிப்பிட வேண்டும்."

~ ஔவையார்



பெயர்: விஜயா வெங்கட்
வகுப்பு: 4 அ
ஆசிரியர்: சிவகாமி

## இங்கிலாந்து

எனக்கு இங்கிலாந்து சென்று பயணம் செய்ய மிகவும் ஆசை. அதற்கு காரணம் பிரிட்டிஷ் அரசு ஒரு காலத்தில் சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்ஜியம் என்று அழைக்கப்பட்டது. என் தாய் நாடான இந்தியாவை அடிமையாக வைத்து கொண்ட நாடு.

இங்கிலாந்து தலைநகரம் லண்டன். அது மிகுந்த அழகான நகரம். தேம்ஸ் நதிக்கரையில் உள்ளது. லண்டன் பாலம். லண்டன் டவர் பாலம் உலகின் மிகவும் அறியப்பட்ட பாலங்களில் ஒன்றாகும்.

லண்டன் மாநகரத்தில் பார்க்க நிறைய இடங்கள் உள்ளன. மெழுகு அருங்காட்சியகம், பக்கிங்ஹாம் அரண்மனை, பிரிட்டிஷ் அருங்காட்சியகம் போன்ற இடங்கள் முக்கியமானவை


பிரிட்டிஷ் அருங்காட்சியகம் பார்க்க மிக அழகாக இருக்கும். இந்தியாவின் மிக விலைமதிப்பற்ற கோஹினூர் வைரம் பாதுகாக்கப்படுகிறது.

மெழுகு அருங்காட்சியகத்தில் உலக தலைவர்களின் உருவ சிலைகள் உள்ளது, குறிப்பாக மகாத்மா காந்தி, சார்லி சாப்ளின் மற்றும் இளவரசி டயானா போன்றவர்களது இடம்பிடித்துள்ளது.

# வகுப்பு - 5 அ ஆசிரியர் திரு. வேதையன்

## பண்டைய கால தமிழர்கள் பற்றிய சில குறிப்புகள்

கி.மு. 3-ஆம் நூற்றாண்டு முதல் கி. பி. 3-ஆம் நூற்றாண்டு வரையிலான காலம் சங்ககாலம் என்று குறிக்கபடுகிறது. இக்காலத்தில்தான் தமிழ் அறிஞர்களைக் கொண்டு மூன்றாம் தமிழ்ச் சங்கம் மதுரை மாநகரில் அமைக்கப்பட்டது. சங்ககாலம் தமிழ் இலக்கிய வரலாற்றில் பொற்காலம் என்று கருதபடுகிறது. இக்காலத்தில் சேரன், சோழன், பாண்டியன் என்ற முப்பெரும் மன்னர்கள் அரசாண்டு வந்தனர்.



தொல்காப்பியத்திலும், புறநானூற்றிலும், திருகுறளின் பரிமேலழகர் உரையிலும் சேர, சோழ, பாண்டியர்களைப் பற்றி குறிப்பிட்டுள்ளது. தேச சஞ்சாரியான மெகஸ்தனிஸ் பாண்டியர்களைப் பற்றி குறிப்பிட்டுள்ளார். சந்திரகுப்த மௌரியரின் அமைச்சர் கௌடல்யரும் பாண்டியர்களை குறிப்பிட்டுள்ளார்.

## சேர பேரரசு

தென்மேற்கு இந்தியாவில் உள்ள மலபார் கரை சார்ந்த நிலப்பகுதியை சேரர் ஆண்டனர். சேர நாட்டை ஆண்ட அரச வம்சத்தினர் சேரர்கள் எனப்பட்டனர். சங்கநூல்கள் பலவற்றில் சேர மன்னர்களைப் பற்றிய குறிப்புகள் இருக்கின்றன. கரூர் அல்லது வஞ்சி என்று அழைக்கபடும் நகரம் சேர நாட்டின் தலைநகரமாக

விளங்கியது. முசிறியும் தொண்டியும் சேரநாட்டின் முக்கிய துறைமுகங்கள் ஆகும். சேர மன்னர்களில் மிகவும் புகழ்பெற்ற மன்னன் சேரன் செங்குட்டுவன். சிலப்பதிகார காப்பிய தலைவியான கண்ணகிக்குச் சிலை எடுத்தவர் சேரன் செங்குட்டுவன். சேரர்கள் ஒருகாலத்தில் குமரி முதல் இமயம் வரை ஆண்டதாக சில தகவல்கள் கூறுகின்றன.

## சோழ பேரரசு

முற்கால சோழர்கள் சங்க காலத்தில் ஆட்சி புரிந்தனர். அவர்களில் மிகவும் சிறந்து விளங்கியவர் கரிகால் சோழன் ஆவார். சோழர்களைப்பற்றி அறிய ஏராளமான கல்வெட்டு, தொல்பொருள் மற்றும் இலக்கியச் சான்றுகள் கிடைக்கின்றன. பிற்கால சோழ மன்னர்கள் கி.பி.850 முதல் கி.பி.1279 வரை சுமார் 430 ஆண்டுகள் ஆட்சி புரிந்தனர்.

தென் இந்தியாவில் இருந்த பெரிய பேரரசு, சோழ பேரரசு. சோழ பேரரசு காவேரி ஆற்று பள்ளத்தாக்கில் ஆரம்பம் ஆனது. உறையூர் அதன் பழைய தலை நகரம் ஆகும். சோழ பேரரசு மண்டலங்கள் மற்றும் வளநாடு, நாடு என பிரிக்கப்பட்டிருந்தது. வருவாய் நிர்வாகமும், கிராம சுய அரசாங்கமும், நீர் பாசனமும் சோழ பேரரசின் செயல் திட்டம் தான்.

சோழ மன்னர்கள் கலைகள், கவிதை, நாடகம், இசை, நடனம் அனைத்தையும் ஆதரித்தனர். நிறைய தமிழ் இலக்கியங்களும், தமிழ் கட்டடகலை சின்னங்களும் சங்க காலத்திலிருந்து கிடைத்தவையாகும். சிறப்பான கற்கோவில்கள் கட்டுவதில் சிறந்தவர்கள் சோழர்கள். சோழ பேரரசு கலாச்சார மற்றும் பொருளாதாரம் அனைத்திலும் முன்னேற்றம் கொண்ட பேரரசாக இருந்தது.

கரிகால சோழன் காவிரி நீரை பாசனத்திற்கு பயன் படுத்த கற்களைக் கொண்டு அணை கட்டினான். இது கல்லணை என பெயர் பெற்றது. முதலாம் ராஜராஜ சோழன் நிறைய நகரங்களை வென்று பேரரசை விரிவாக்கினான். ராஜராஜ சோழன் தஞ்சாவூர் பெரிய கோவிலைக் கட்டினான். தஞ்சாவூர் பெரிய கோவில் இந்தியாவில் மிக பெரிய கோவில். அது 216 அடி உயரம். அதன் கும்பம் ஒரு கல்லிருந்து செதுக்கியது. அந்த கல்லின் எடை மட்டும் 80

டன் ஆகும். கோவில் முன் உள்ள நந்தியும் ஒரு கல்லிலிருந்து செதுக்கியதாகும்.

சோழர்கள் இந்தியா, இலங்கை, வங்காளதேசம், மியான்மார், மலேசியா, இந்தோனேசியா, சிங்கப்பூர், மாலத்தீவுகள், தாய்லாந்து, மற்றும் கம்போடியா ஆகிய நாடுகளிலும் தங்கள் ஆட்சியை நிலைநாட்டி இருந்து இருக்கிறர்கள்.



**உலகிலேயே மிகப் பெரிய இந்துக் கோவில்: அங்கோர் வாட்**

'அங்கோர் வாட்' என்பது உலகிலேயே மிகப் பெரிய இந்துக் கோவில் ஆகும். அது கம்போடியா நாட்டில் உள்ள அங்கோர் நகரத்தில் அமைந்துள்ளது. இந்த வைணவ கோவில், இரண்டாம் சூரியவர்மன் என்ற அரசனால் பதினொன்றாம் நூற்றாண்டில் கட்டப்பட்டது.

கம்போடியர்கள் சோழர்களுடன் உணவுப் பொருட்களை வணிகம் செய்து இருக்கிறர்கள். கம்போடிய நாட்டு கோவில்களில் தமிழ் கல்வெட்டுகள் இருக்கின்றன. கம்போடிய மொழி தமிழ் மொழியின் அடிப்படையில் இருந்து உருவாகியிருக்கிறது. கம்போடியர்கள் பயன்படுத்திய எழுத்து வடிவத்தில்

பண்டைய காலத்து கெமெர் எழுத்துக்கள் இருக்கின்றன. இது பல்லவ காலத்தைச் சேர்ந்த தமிழ் எழுத்தை அடிப்படையாக கொண்டது. இக்காலத்திலும் கம்போடியாவில் தமிழ் வழி வந்த மக்கள் வாழ்கின்றார்கள். அவர்கள் இன்றும் தமிழ் மொழி, கலாச்சாரம் மற்றும் பழக்க வழக்கங்களையும் பின்பற்றி வாழ்கிறார்கள்.

தமிழர்களின் கலாச்சாரங்களும் பாரம்பரியங்களும் நீர் பாசன அமைப்பு போன்ற கருத்துக்களும் கிழக்கு ஆசியா முழுவதும் பரவியிருப்பது தமிழர்கள் எந்த அளவுக்கு மேம்பட்டு வாழ்ந்து இருக்கிறார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது. இதற்கு அங்கோர் வாட் ஒரு சிறந்த உதாரணம் ஆகும்.

## பாண்டிய பேரரசு

பாண்டியர்கள் தமிழ் நாட்டை ஆண்ட மூவேந்தர்களுள் ஒருவராவர். அவர்கள் மதுரை, திருநெல்வேலி மற்றும் தென் தமிழ் பகுதியை கி.பி 600 முதல் 17-ம் நூற்றாண்டின் முற்பகுதி வரை ஆண்டு வந்தனர். முதலில் "கொற்கை"-யை தலை நகராக கொண்டு ஆட்சி செய்த பாண்டியர்கள், பின்னர் "மதுரை"-யை தலை நகராக மாற்றினர்.



"மீன்" அவர்களின் சின்னம்.

பாண்டியர்கள் காலத்தில் தமிழ் எழுச்சியும்,வளர்ச்சியும் பெற்றது. பாண்டிய நாடு கல்வி, தொழில், வணிகம் மற்றும் படை வலிமையில் சிறந்து விளங்கியது. பாண்டியர்கள் கிரேக்கம் மற்றும் உரோமாபுரியுடன் வணிகத் தொடர்பு வைத்திருந்தனர். மதுரை, கொற்கை முதலான நகரங்களில் கிடைத்த உரோமாபுரி நாணயங்களே இதற்கு சான்று. பாண்டி நாட்டு கொற்கைப் பெருந்துறையில் முத்துக்களும்,சங்குகளும் பெருவாரியாகக் கிடைத்தன.கொற்கை முத்து உலகெங்கும் சென்றதும் குறிப்பிடத்தக்கது. சுமார் கி.பி. 1268-1310 - குலசேகர பாண்டியனின் ஆட்சியில் மதுரை உலகின் தலைசிறந்த செல்வச்செழிப்புள்ள நகரமாக இருந்ததாக மார்க்கோபோலோ குறிப்பு கூறுகிறது.

"சிலப்பதிகாரம்" - பாண்டிய மன்னனிடம் நீதி கேட்ட கண்ணகியின் கதை. இதில் நீதி தவறிய பாண்டியன் உடனே உயிர் நீத்த வரலாறு கூறப்பட்டுள்ளது.

பாண்டிய நாட்டில் முத்துக் குளித்தல்,சங்கறுத்தல்,வளையல் செய்தல்,உப்பு விளைவித்தல்,நூல் நூற்றல், ஆடை நெய்தல், வேளாண்மை செய்தல், ஆடு, மாடு மேய்த்தல் போன்ற பல தொழில்களும் செய்து வந்தனர். மதுரையில் நுண்ணிய பருத்தி நூலினாலும், எலி மயிரினாலும், பட்டு நூலினாலும் ஆடைகள் நெய்யப்பட்டன எனச் சிலப்பதிகாரப் பாடல் வரிகள் கூறுகின்றன.



மொகலாய மன்னர்களால் பாண்டியர்கள் வலிமை இழந்தனர். பின்னர் விஜய நகரப் பேரரசின் ஆதிக்கத்தில் பதவி பெற்ற தமிழ் மன்னர்களில் பெறுமை பெற்ற மன்னர்கள் - நாயக்கர்கள். **"நாயக்கர்கள்"** மதுரை மற்றும் தென் தமிழ் நாட்டை சிறப்பாக ஆண்டார்கள்.



அவர்கள் காலத்தில் கட்டப்பட்ட "திருமலை நாயக்கர் மஹால்" மற்றும் "மீனாட்சி அம்மன் கோவில்" இன்றும் அவர்களின் பெருமையை பறை சாற்றுகின்றன.

5-ஆம் வகுப்பு 'அ' பிரிவு மாணவர்கள்.


கவின் கோவிந்தராசன், ஸ்ரீராம் ஸ்ரீனிவாசன், ஜெயஸ்ரீ ஹரிதாஸ், கோகுல் தாஸ், ஆன்ரு ஜேவியர்

ஆசிரியர் திரு. வேதையன்

## ஆசிரியர் திரு. இரவி

## மேல்நிலை வகுப்பு

## 1 அ



துணிவு

Kadhir Pitchamuthu - கதிர் பச்சமுத்து

# மே.நி.வகுப்பு - 1 அ ஆசிரியர் திரு. இரவி

Ponni Theertharappan
பொன்னி தீர்த்தாரப்பன்
உயர்நிலைப்பள்ளி 1A
ஆசிரியர் திரு. இரவி
சண்முகம்

## மீனாட்சி அம்மன் கோவில்

மீனாட்சி அம்மன் கோவில் தமிழ் நாட்டில் மதுரையில் இருக்கிறது. இந்த கோவில் குலசேகர பாண்டியனால் கட்டப்பட்டது. இந்த கோவிலில் பன்னிரெண்டு சிறிய கோபுரங்களும் நான்கு பெரிய கோபுரங்களும் உள்ளன. இந்த கோபுரங்களை வைத்து கோவில் எங்கே இருக்கிறது என்று கண்டுபிடித்து விடலாம். கிழக்கு கோபுரத்தின் உயரம் 161'3". தெற்கு கோபுரத்தின் உயரம் 170'6". மேற்கு கோபுரத்தின் உயரம் 163'3". வடக்கு கோபுரத்தின் உயரம் 160'6".

இந்த கோவிலில் உள்ள சிலைகளை பன்னிரெண்டு வருடத்திற்கு ஒரு முறை சுத்தம் செய்து வண்ணம் தீட்டுவார்கள்.

அஷ்ட சக்தி மண்டபம் என்று ஒரு மண்டபம் இருக்கிறது. இந்த மண்டபத்தில் தொலைவிலிருந்து வரும் பக்தர்களுக்கு உணவு வழங்கப்படும்.

ஊஞ்சல் மண்டபமும் கிளி கூண்டு மண்டபமும் குளத்தின் மேற்கு பகுதியில் உள்ளது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மீனாட்சி சுந்தரேஸ்வரரின் சிலையை ஊஞ்சலில் வைத்து ஆட்டுவார்கள். கிளி கூண்டு மண்டபத்தில் உள்ள கிளிகள் மீனாட்சியின் பெயரை திருப்பி சொல்வதற்கு பழக்கி வைத்திருக்கிறார்கள்.

ஆயிரங்கால் மண்டபத்தில் 985 தூண்கள் உள்ளன. வசந்த மண்டபம் திருமலை நாயக்கரால் கட்டப்பட்டது. இப்பொழுது புது மண்டபம் என்று அழைக்கப்பட்டது.

என் அம்மாவும் அண்ணாவும் மதுரையில் பிறந்தார்கள். நான் விடுமுறைக்கு இந்தியா போகும் பொழுது மீனாட்சி அம்மன் கோயிலுக்கு போவேன். இது மிகவும் அழகான கோவில். எல்லோரும் பார்க்க வேண்டிய மிக முக்கியமான கோவில்.

---

ருவைதா சித்திக்
(Ruwaydah Siddik)
உயர்நிலை 1அ
ரவி சண்முகம்

## இன்பச் சுற்றுலா

2012 ஆம் ஆண்டில் நாங்கள் ஒரு வார விடுமுறைக்கு உல்லாசப் பிரயாணக் கப்பலில் சென்றோம். அது ஒரு மறக்க முடியாத அனுபவமாகும். எங்கள் குடும்பமும் வேறு மூன்று குடும்பங்களுடம் ஒன்றாகச் சென்றோம். மேலும் என் சிறந்த தோழியும் எங்களுடன் வந்தாள். முதல் நாள் நானும் என் தோழியும் கப்பலை சுற்றிப் பார்த்தோம், கப்பலின் அழகு எங்களை உற்சாகப்படுத்தியது. பிறகு, சாப்பிடும் இடத்திற்கு சென்றதும் தான், நாங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தோம் அங்கு விதவிதமான உணவு வகைகள் இருந்தன. சீன உணவு, இத்தாலிய உணவு, இந்திய உணவு மற்றும் பல்நாட்டு உணவு வகைகள் அங்கு இருந்தன. ஆனால் நானும் என் தோழியும் அவசரமாக சாக்லெட் நிலையத்தை நோக்கி ஓடினோம்.

அடுத்த நாள் நாங்கள் உயரத்தில் இருக்கும் நீச்சல் குளத்திற்குச் சென்றோம். அந்த இடத்திலிருந்த கடற்காட்சி மிக அற்புதமாக இருந்தது. அடுத்த நாள் கப்பல் கொசுமெல் மெக்சிகோவில் இறங்கியது. இங்கு நாங்கள் பழங்கால மாயன் இடிபாடுகளைப் பார்த்தோம். நான் மாயன் கலாச்சாரத்தை பற்றி சுவாரஸ்யமான தகவல்களை தெரிந்து கொண்டேன். அடுத்த நாள் கப்பல் ஜமைக்காவில் நின்றது. இங்கு ஒரு புறம் கடலும் மறுபுறம் மலையும் அமைந்திருந்தன. மலையிலிருந்து ஓடி வந்த ஆறு கடலில் அருவியாக கொட்டியது காட்சி மிக அருமையாக இருந்தது. அருவிக்கு மேல் ஏறிய போது, பயமாகவும் கிளர்ச்சியூட்டுகிற அனுபவமாக இருந்தது. பிறகு ஒரு அழகான கடற்கரையை அடைந்தோம். இங்கு பாலபின் இருக்கும் இடத்திற்கு ஒரு கிளைப்படகில் சென்றோம். அந்த விடுமுறை ஒரு மறக்க முடியாத சம்பவமாகும்

## மே.நி.வகுப்பு - 1 அ ஆசிரியர் திரு. இரவி

முகில் குருபரன்
Mukil Guruparan
உயர்நிலை 1அ
ரவி சண்முகம்

# பிரமிடுகள்

ஏழு ஆதிக்கால உலக அதிசயங்களில், மிகவும் பழமையானது முழுமையானதும் எகிப்தின் பிரமிடுகள் ஆகும். இவை 2560 கி.மு. கட்டப்பட்டன என்று நம்பபடுகிறது. இவை 4574 ஆண்டுகளாக சிதையாமல் இன்னும் நன்றாக இருப்பது வியக்கத்தக்கது.

மூன்று பெரிய பிரமிடுகளில் "கீசாவின் பெரிய பிரமிடு" மிகவும் பழமையானதும் மிகவும் உயரமானதும் ஆகும். இது 481 அடி உயரம் உள்ளது. இது 3,800 ஆண்டுகள் மனிதனால் கட்டப்பட்ட கட்டடங்களில் உயரமானதாக இருந்தது. இதை எப்படி கட்டியிருப்பார்கள் என்பதற்கு பல கருத்துகள் நிலவுகின்றன. சுரங்கங்களிலிருந்து கற்களை இழுத்துவந்து கட்டியிருப்பார்கள் என்பது பலராலும் ஒத்துக்கொள்ளப்பட்ட கருத்து.

இந்த பிரமிடில் மூன்று அறைகள் இருக்கின்றன. முதலாவது, பிரமிடின் கீழே முடிக்கப்படாமல் இருக்கிறது. அரசியின் அறையும் அரசனின் அறையும் பிரமிடின் மேலே இருக்கின்றன. இவை அரசன் கூ-ஃபு மற்றும் அரசி கியோப்ஸ் நினைவாக கட்டப்பட்டது.

இந்த பழம்பெரும் அதிசய கட்டிடங்களை காண்பதற்கு ஒவ்வொரு ஆண்டும் இலட்ச கணக்கான சுற்றுலா பயணிகள் கீசாவுக்கு செல்கிறார்கள். நான் என்னுடைய குடும்பத்தாருடன் "கீசாவின் பெரிய பிரமிடு பார்க்க சென்றேன். ஒட்டகங்களின்மீது ஏறி பிரமிடுகளை பார்த்தது ஒரு மறக்கமுடியாத அனுபவமாக இருந்தது.

---

சூர்யா சண்முகம் Surya Shanmugam ஆசிரியர்: இரவி சண்முகம்
வகுப்பு: உயர்நிலை 1அ

# நம் தாய்மொழியின் மேன்மை

தொழில் நுட்பத்தில் சிறந்து விளங்கும் ஒவ்வொரு நாடும் தனக்கென பல அளவைகளை வகுத்துக் கொண்டு இருக்கிறது. இவை துறைக்குத் துறை வேறுபட்டு இருக்கும். தமிழர் தொழில் நுட்ப மேன்மையை பின்வரும் தமிழர் அளவை முறைகளினால் அறியலாம்.

அளவை முறை ஏழு வகைப்படும். அவை எண்ணல், நிறுத்தல், முகத்தல், பெய்தல், நீட்டல், தெறித்தல், சார்த்தல், என்பன.

ஒன்று, இரண்டு, மூன்று, என்று பத்து வரை கணக்கிடுவது, இலக்கமாக முந்திரி, அரைக்காணி, காணி, கால்வீசம், அரைமா, அரைவீசம், ஒருமா, மாகாணி, இருமா, அரைக்கால், வீசம், கால், அரை என்று எண்ணிக் கணக்கெடுப்பது, தொகையாக பத்து, நூறு, ஆயிரம், பதினாயிரம், இலட்சம், மெய்யிரம், கோடி, அற்புதம் (பில்லியன்), நிகற்புதம், கும்பம், கணம், கற்பம், நிகற்பம், பதுமம், சங்கம், வெள்ளம், அந்நியம், மத்தியம், பரார்த்தம், பூரியம், பிரமகற்பம், அல்லது முக்கோடி, மகாயுகம், என்ற பெயர்களைக் கொண்டு கணக்கெடுப்பது எண்ணலளவையாகும்.

குன்றிமணி, வராகனெடை, பலம், வீசை, துலாம், பாரம் என்று தராசிலிட்டு நிறுப்பது நிறுத்தலளவை.

செவிடு, ஆழாக்கு, உழக்கு, உரி, படி, மரக்கால், குறுணி, பதக்கு, தூணி என்பன முகத்தலளவைப் பெயர்கள். மேற்கூறிய முகத்தலளவைப் பெயர்களோடு பறை, கரிசை, கலம், பொதி என்ற அளவைகள் பெய்தலளவையைக் குறிக்கும்.

கரிசை, கலம், பொதி, என்ற அளவைகள் பெய்தலளவையைக் குறிக்கும்.

கோண், நுண்ணணு, அணு, கதிர்த்துகள், துசும்பு, மயிர்முனை, நுண்மணல், சிறு கடுகு, எள், நெல், விரல், சாண், முழம், கஜம், பாகம், காதம் என்பவை நீட்டலளவைப் பெயர்களாகும்.

காலத்தை குழிகள், கண்ணிமைகள், கைநொடி, மாத்திரை, சிற்றுழி, குரு, விநாடி, உயிர், சாணிகம், அணு, துளி, கணம், சாமம், சிறுபொழுது, நாள், கிழமை, அழுவம், திங்கள், பெரும்பொழுது, ஆண்டு, வட்டம், ஊழி என கணித்து அளப்பது தெறித்தலளவை.

தமிழின் அளவை முறைகளின் நுட்பம் மேன்மையும் சிறப்பும் வாய்ந்ததாகப் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே இருந்திருப்பது, செந்தமிழாம் தமிழ்மொழியின் சிறப்பைக் கண்டு என்னை மேலும் வியக்க வைக்கிறது.

# பெற்றோர் வாழ்த்து




தொண்டார்வமிக்க தமிழரால்
பெற்றெடுக்கப்பட்ட கேரி தமிழ் பள்ளி
ஒன்றிலிருந்து பன்னிரெண்டு வரை
வாரந்தோறும் வகுப்புக்கள்
ஆத்திச்சூடியும் இலக்கியமும்
தமிழினத்தின் நியதியையும்
தன்னிச்சையில்லாத தமிழர் மூலம்
புதிய தமிழனை உருவாக்குது !

பெயர் :- கார்த்திகேயன் மணிவாசகம்.

# தமிழ் மழை 2013 - 2014







ஷாலினி சுப்ரமணியன்


எரின் வால்ட்டர்


மதுமதி இளங்கோ
நித்தின் ஹரிதாஸ்



## கேரி தமிழ்ப்பள்ளி - ஆண்டு – 2013 - 2014 | ராஜி சண்முகம் – தலைமை ஆசிரியை

| மீனா இளஞ்செயன் - 1 | ரெமி சுதர்சன் – 1 | கலைச்செல்வி சூலூர் – 1 | தண்டபாணி சுப்ரமணியன் - 1 | அருணா தர்மர் - 1அ |
|---|---|---|---|---|
| பழனியப்பன் அருணாச்சலம் | ஸ்ரீவர்தன் சண்முகராஜ் | அம்ருதா ஜசக் | ஓவியா அறிவுடைநம்பி | ஸ்ரீராம் குமார் |
| ஹர்ஷினி தண்டபாணி | நிசாந்த் ஸ்ரீனிவாசன் | ஸ்ரீநாத் ஜெயராமன் | ஆர்யா மயில் | பிருத்து பொன்னுசாமி |
| நிதின் ஜெகதீசன் | அரவிந்த் சுனில்குமார் | விஷ்ணு லிங்கராஜ் | ஆனந்தி செல்வராஜு | சந்தோஷினி ராதாகிருஷ்ணன் |
| தக்ஷா கார்த்திகேயன் | விரதேஷ் வெங்கடகிருஷ்ணன் | கௌதம் முத்து | ஆதுஷன் சுதர்ஷன் | அனித் சஜீவன் |
| ரேவந்த் கார்த்திகேயன் | புவனேஷ் செந்தில் | ரோஹன் சுரேஷ் | அக்ஷிதி நாராயணன் | பாவனா ஸ்ரீனிவாசன் |
| | | தான்யா விஜயகுமார் | | அருண் இளஞ்செயன் |
| **சபிதா தீத்தாரப்பன் - 1அ** | **லலிதா சண்முகவேல் - 1அ** | **செல்வி செந்தில் - 1அ** | **வேலப்பன் வேலப்பன் - 1அ** | **சீனிவாசன் ரெங்கசாமி - 1அ** |
| அக்ஷிதா அருண் | அனன்யா ஜெயக்குமார் | அதிதி தினேஷ் | பரத் ஜவஹர் | ராஷ்மி ராமானுஜம் |
| ரங்கநாத் கோபால்ராஜ் | ஸ்மிருதி சஞ்சய் | ஆதிரை எழில்வேந்தன் | அருண் முரளி | அபிஷேன் சுதர்ஷன் |
| மஹேஷ்வர் முருகேசன் | அன்ஜும் சபியுல்லாகான் | ஹேமந்த் சுதாகரன் | அனன்யா ராமன் | சேஷாந்த் விஜயகுமார் |
| ரூபக் ராஜசேகர் | ஸ்ரவன் சுப்ரமணியன் | ரித்தின் வேல்மணி | வினிதா ஹரிணி ரவிவர்மா | எரின் வால்ட்டர் |
| நேத்ரா அசோக்குமார் | மஹதி சுந்தரராஜன் | நிர்மல் சந்திரன் | ஓவியா இளங்கோவன் | |
| **அமுதவல்லி தசரதன் - 1அ** | **காசி அழகானந்தம் - 1அ** | **சௌம்யா கணபதி - 1ஆ** | **விசயலெட்சுமி ராஜேஷ் - 1ஆ** | **கார்த்திகேயன் நாகலிங்கம்-1ஆ** |
| சாரஸ்ரீ கடாம்பி | கேசவ் லக்க்ஷிமிநாராயணன் | சிவா இராஜேஷ் | தன்யா பாலசுப்ரமணியன் | வருண் கோவிந்தராசன் |
| மாதவ் கார்த்திகேயன் | நேஹா ஸ்ரீனிவாசா | ஹர்ஷா சுதாகர் | அவினாஷ் ஜெயகுமார் | நிவிதா கன்டியர் |
| ரிதன்யா நாகராஜா | சஞ்ஜித் ஸ்ரீராம் | ஆர்த்தி ஸ்ரீனிவாசன் | சஞ்சித் சிவகுமார் | அச்யுதா அனந்தகிருஷ்ணன் |
| க்ரிடி நந்தகுமார் | அனிஷ் சுரேஷ் | ஈஸ்வர் செந்தில் | சித்தார்த் சைலேஸ்வரன் | ஆர்னி பேன்கரஸ் |
| ஷ்ரீயா புகழேந்தி | விஷால் சுப்பிரமணியன். ரா. | சஞ்ஜய் சுப்ரமணியன் | அவனேஷ் விஜயகுமார் | அக்ஷயா ராஜேஷ் |
| **இன்னாசிமுத்து சவேரியார்-1ஆ** | **அல்லி தாஸ் - 2அ** | **பத்மப்பிரியா கந்தசாமி - 2அ** | **பாரத் இராமமூர்த்தி - 2அ** | **சுஜாதா மோகன் - 2அ** |
| பூர்வஜா சந்திரமௌலி | சாஸ்னா ஜெயராமன் | கார்த்திக் அண்ணாதுரை | மதுமதி இளங்கோ | லக்ஷ்மி கோபால்ராஜ் |
| பைரவி ஜெயராமன் | அனிதா முரளி | ஸ்ரீமன் பத்ரி | நித்தின் ஹரிதாஸ் | பவானி ஜயராமன் |
| சஹானா கதிரவன் | பத்மநாபன் சரவணன் | திரிஷா பாரத் | உமெஷ் ராதாகிருஷ்ணன் | அஷ்வின் செந்தில் |
| சாரங்கா ராஜகோபாலன் | ரத்திஸ்ரீ சீனிவாசன் | சாதனா மயில் | அனிஷா சிவயோகன் | நொவிதா லெனின் |
| டேவிட் சவேரியார் | கேஷவ் வரதராஜன் | ஸ்ருதி சுப்ரமணியன் | ஷ்யாம் ரவிசந்திரன் | யஷ்மிதா லெனின் |
| புனீத் பரமேஸ்வரன் | அந்தரா விவேக் | அஷ்வத் அருண் | சாதனா ஸ்ரீனிவாசன் | பூஜா பரமேஸ்வரன் |
| **சித்தீக் சின்னதம்பி – 2ஆ** | **சுகந்தினி சந்திரசேகரன் – 2ஆ** | **சித்ரா பாஸ்கரன் – 2ஆ** | **ஷபி கான் – 3அ** | **மணிவண்ணன் முத்துமாணிக்கம் – 3அ** |
| ரோஷனி அருண் | ஆனந்த் அழகானந்தம் | ராகவ் அருண் | ஹேமாக்ஷி அறிவுடைநம்பி | ஜோ டேனிகா இனிகோ |
| கைலாஷ் முத்து | ஆனன்யா பத்ரி | ஷிவாலி ராஜேந்திரன் | அபிசிரன் பாஸ்கரன் | தரணி செந்தில்குமார் |
| அபிநயா சந்திரசேகரன் | அமரன் கன்டியர் | அதிதி ஆனந்த் | காவ்யா குமார் | அஜய் சுனில்குமார் |
| ஹானா சவேரியார் | சரண்யா ஸ்ரீனிவாசன் | அதிதி நாராயணன் | ஓம் செந்தட்டி | கிருத்திகா வேலப்பன் |
| ஆகாஷ் சண்முகவேல் | ஷாலினி சுப்ரமணியன் | நேத்தன் நாயகம் | அனன்யா சுந்தர் | லொரன் சவேரியார் |
| கௌதம் தர்மர் | ஸ்ரீ நிதி | அபிஷேக் சஜீவன் | | |
| ஆர்த்தி சுரேஷ் | | | | |

# கேரி தமிழ்ப்பள்ளி - ஆண்டு – 2013 - 2014

## ராஜி சண்முகம் – தலைமை ஆசிரியை

| குரு குருபரன் – 3அ | ஆற்காடு இராஜசேகர் - 3ஆ | ரம்யா வரதராஜன் - 3ஆ | பாரதி பாண்டி – 4அ | சிவகாமி அண்ணாதுரை - 4ஆ |
|---|---|---|---|---|
| ரத்தி கணேசன் | மீரா இராஜேஷ் | அர்ச்சனா அண்ணாதுரை | யாழினி எழில்வேந்தன் | ஆதித்யா பாலாஜி |
| அட்சயன் சந்திரசேகரன் | ராஜீ கணேசன் | ஐஸ்வர்யா பாலாஜி | சுருதி இராஜகோபாலன் | வருண்யா கார்த்திகேயன் |
| சிந்து சண்முகம் | திவ்யா லக்ஷ்மிநாராயணன் | அனுபூரீ ஜெயகுமார் | சரண் சந்திரசேகரன் | அஜய் முத்துக்குமார் |
| சுஜெய் சுதர்சன் | ஹர்சினி வேல்மணி | அஸ்வின் லிங்கராஜ் | அஷ்வின் சிவயோகன் | ராம்கிஷோர் சுதர்சன் |
| திவ்யா தியாகராஜன் | ஆசிகா அருண் | அஸ்வினி தண்டபானி | சரண் சிவகுமார் | வித்யா வெங்கடகணேசன் |
| | | | | காஞ்சனா சந்திரன். |
| | | | | |
| எழில்வேந்தன் தர்மராஜன் - 4ஆ | சக்திவேல் கார்த்திகேயன் - 4ஆ | வேதா வேதையன் – 5அ | இரவி சண்முகம் – மே.நி. 1அ | |
| ஆர்த்தி அண்ணாதுரை | நாகார்ஜுன் இளங்கோவன் | கோகுல் தாஸ் | முகில் குருபரன் | |
| ஜூலியன் நாயகம் | சுவேதா புகழேந்தி | கவின் கோவிந்தராஜன் | கதிர் பச்சமுத்து | |
| அகிலன் பாண்டி | அருண்குமார் செந்தில்குமார் | ஜெயபூரீ ஹரிதாஸ் | சூர்யா சண்முகம் | |
| சாரா சவேரியர் | அனுமீனா சொர்ணா | பூரீராம் பூரீனிவாசன் | பொன்னி தீத்தாரப்பன் | |
| கார்த்திக் இளங்கோ | நிகில்கணேஷ் வரதராஜன் | ஆன்ட்ரூ சவேரியார். | ருவேதா சித்தீக் | |
| அபர்ணா தர்மர் | | சந்திரா மணிவண்ணன் | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

# தமிழ் இசைக் கருவிகள்

## காற்று வாத்தியங்கள்



பவுன் நாயினம்
கி.பி. 12 ஆம் நூற்றாண்டு



பாரி நாயினம்
கி.பி. 13 ஆம் நூற்றாண்டு

## தாள வாத்தியங்கள்



வீர முரசு (டமாரம்)
கி.பி. 2 ஆம் நூற்றாண்டு




உடுக்கை
கி.பி. 2 ஆம் நூற்றாண்டு



கிடுகிட்டி
கி.பி. 5 ஆம் நூற்றாண்டு



உருமி
கி.பி. 15 ஆம் நூற்றாண்டு


கேரி தமிழ்ப்பள்ளி